# சுதந்திரப் பறவைகள்

பறவை 09 பாடல் 09 1994 மார்கழி - 1995 தை அன்பளிப்பு ரூபா 5-00


## அரசின் புனர்வாழ்வுத் திட்டத்தில்

# பாதிக்கப்பட்ட பெண்களுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும்

சிறீலங்கா அரசு வடக்கு, கிழக்கு பிரதேசங்களின் புனர்வாழ்வு வேலைத்திட்டத்துக்கென நாலாயிரம் கோடி ரூபாவினை ஒதுக்கத் தீர்மானித்துள்ளது. அரசு புலிகள் பேச்சுவார்த்தையின்போது தீர்மானிக்கப்பட்ட விடயம் இது.

தற்போதுள்ள சூழ்நிலையில் நீண்டகால யுத்தப் பாதிப்புக்களை இத்தொகை எவ்வாறு ஈடுசெய்யும் என்பது இன்னொரு பிரச்சனையாய் இருப்பினும் கூட, இத்தொகையில் நாம் செய்ய வேண்டிய முக்கிய வேலைத்திட்டம் ஒன்றைக் கருத்தில் எடுக்க வேண்டும்.

நமது தாயகப் பிரதேசத்தில் நீண்டகால போர் நடவடிக்கையின் விளைவாக பொருளாதாரரீதியாக, உளரீதியாக, உடல்ரீதியாக பல்வேறு பாதிப்புக்களை எமது சமூகம் சந்தித்துள்ளது. யுத்த சூழ்நிலை காரணமாக மக்களின் இடப்பெயர்வுகளும் குடும்பங்களில் ஏற்பட்டுள்ள இழப்புகளும் மக்களின் சமூக, பொருளாதார வாழ்க்கை முறைகளைச் சீர்குலைத்துள்ளது. இதனால் நாம் அடையவேண்டிய முன்னேற்றத்திலும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களைப் புள்ளிவிபர அடிப்படையிற் பார்க்கும்போது 1983 ஆம் ஆண்டுக்கும் 1994 ஆம் ஆண்டுக்கும் இடையில் ஏழு லட்சம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதில் நாற்பத்தைந்து வீதமான குடும்பங்கள் 1990க்குப் பின் பாதிக்கப்பட்டன.

இந்த யுத்தத்தின் நேரடி விளைவாகவும் மறைமுக விளைவாவும் பெண்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். குறிப்பாக உழைப்பாளர்களை இழந்த பெண்களின் தொகை வெகுவாக அதிகரித்து வருவதனைக் காணமுடிகிறது. முக்கியமாக கடற்தொழிலை நம்பியிருந்த கரையோர மக்களின் வாழ்வில் இவ்விழப்புக்கள் பரவலாக நடைபெற்றன. கடலிலே மீன்பிடிக்கச் சென்ற கணவனை இழந்த நிலையையும்,வீட்டின் முக்கிய உழைப்பாளியாக இருந்த மகனை இழந்த நிலையையும் இந்தக் கரையோரத் தாய்மார் சந்தித்தனர். இதனால் அவர்க

(09-ம் பக்கம் பார்க்க)



''அப்ப சமாதானம் வருமே மோனை''
''எங்கடை தமிழீழத்திலை அது நிரந்தரமா நிக்கவேணும் அம்மா''

விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பின் அதிகாரபூர்வ ஏடு

எங்கள் பார்வையில் . . . .

# கிடைத்துள்ள வாய்ப்பை பெண்கள் சரியாகப் பயன்படுத்தவேண்டும்

ஒரு நாட்டின் மேம்பாடு அந்நாட்டு மக்களின் கடின உழைப்பிலேதான் தங்கியிருக்கின்றது. ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு, ஒன்றாக இணைந்து உழைக்கும் மக்கள் சமுதாயம் தன்னை மிக வேகமாக வளர்த்துக்கொள்ளும்.

அடிக்கடி தொடரும் அரச வன்முறைகளால், அரச படைகளின் தாக்குதல்களால் சேதமுற்றிருக்கும் நம் நாட்டை நாம் வேகமாக மேம்படுத்தவேண்டிய தேவை ஒன்று நம்முன் எழுந்துள்ளது. நாட்டு மேம்பாடு எனும்பொழுது அதிலே பொருளாதார மேம்பாடு, சமூக மேம்பாடு, தொழிநுட்ப வளர்ச்சி, பழக்கவழக்கங்கள் என்று பல விடயங்கள் அடங்கும்.

நமது நாடு மனித வளத்தைத் தன்னகத்தே நிறைய வைத்திருக்கின்றது. ஆகவே நாம் எமது மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஆட்பற்றாக்குறையை எதிர்நோக்கவேண்டிய தேவை இல்லை. ஆனால் நாம் ஆட் பற்றாக்குறையைத்தான் அதிகமாக எதிர்நோக்குகின்றோம். ஏனென்று பார்த்தால் நாட்டின் சனத்தொகையில் பாதிக்கு மேலுள்ள பெண்கள் பெருமளவில் உற்பத்திகளிலோ, சமூக மேம்பாட்டுத் திட்டங்களிலோ பங்கு கொள்ளவில்லை என்பது தெரிந்தது. இங்குள்ள பெண்களுக்கு கல்வியறிவோ, தொழிற்றிறனோ போதியளவு இல்லை, அல்லது தொழில் முயற்சியில் ஈடுபடவேண்டும் என்ற சிந்தனை அற்றவர்களாக இருக்கின்றார்கள்.

இந்த நிலை இன்று நேற்றல்ல, நீண்ட காலமாகவே நம் பெண்கள் இந்நிலையில்தான் வாழ்ந்து வந்திருக்கின்றார்கள். ஆண்களை மட்டுமே நம்பி வாழும் குடும்ப அமைப்புத்தான் நமது சமூகத்தின் மிகப்பெரிய பலவீனம். நமக்குள்ள இந்தப் பலவீனத்தை மிகச் சரியாக சிறீலங்கா இராணுவமும் இந்திய இராணுவமும் இனங்கண்டு கொண்டன. அதனாலேதான் தமிழ் இளைஞர்களையும் குடும்பத் தலைவர்களையும் பெருமளவில் வெட்டியும் சுட்டும் அழித்தனர். தாங்கள் வெளியுலகைத் தெரிந்து கொள்வதற்கு அதுவரை காலமும் வாய்ப்பளிக்காமல் வீட்டுக்குள்ளேயே பூட்டி வைத்திருந்த, காலம் முழுவதும் உங்களைப் பராமரிப்போம் என்று உறுதியளித்த தம் குடும்ப ஆண்களை இழக்க நேரிட்டபோது பல பெண்கள் நடுத் தெருவுக்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டது. குடும்பத்தைப் பராமரிப்பதற்காக வருமானமீட்டக்கூடிய எந்தத் தொழிலையுமே செய்யத் தெரியாமல் தம்மிடமிருந்த தமது சொத்துகளைச் சரியானமுறையில் பராமரிக்கத் தெரியாமல், வெளியுலகோடு எப்படிப் பழகுவது என்று தெரியாமல் தம் எதிர்காலத்தையே இருட்டாக உணர்ந்தனர். சமூக வாழ்வோடு இயைந்துபோக வழி தெரியாமல் தனித்து ஒதுங்கிப்போயினர்.

இது நாம் கடந்த காலத்தில் கற்ற ஒரு பாடம்.

ஓரளவுக்காவது பெண்கள் வெளியில் வந்தது இந்த இராணுவ நெருக்கடிக் காலகட்டத்தில்தான். ஆனால் முழுமையான ஒரு மாற்றம் இன்னமும் வந்துவிடவில்லை. வெளியில் வந்து உலகைப் பார்க்கும் வாய்ப்புள்ள பெண்கள் ஏனைய பெண்களுக்கு அவர்களின் உண்மை நிலையைப் புரியவைக்கவேண்டும். தமது குடும்பத்துப் பெண்கள் 'அடக்கமாக, கௌரவமாக' இருப்பதற்காகத்தான் தாம் உழைக்கின்றதாக நினைக்கின்ற ஆண்கள், கடந்த கால அனுபவத்தை ஒருமுறை மீட்டுப் பார்க்கவேண்டும். இன்னுமொரு முறை நமது மண் பாரிய அழிவுகளைச் சந்திக்காமல் தவிர்க்கவேண்டும் என்றால், விழுந்த பொருளாதாரத்தையும் சரிந்துகொண்டிருக்கின்ற சமூக நிலையையும் உயர்த்துவதற்குப் பெண்களும் ஆண்களும் இணைந்தே உழைக்கவேண்டும்.

தன்னுடைய கணவன் அரசியல் களத்திலே உயிரிழந்த பின்னும் சோர்ந்து போகாமல் கணவரின் கட்சியைத் தலைமையேற்று நடாத்தி தனது ஆளுமையால் சிறீலங்காவின் ஆட்சியையே இன்று பொறுப்பேற்றிருக்கின்றார் ஒரு பெண்மணி. அவர் எம்முடன் நடாத்திய பேச்சுக்களின் பயனாக தமிழ்ப்பகுதிகளின் மேம்பாட்டுக்கென ஒரு குறிப்பிட்ட தொகைப் பணத்தை ஒதுக்க ஒப்புதல் தெரிவிக்கப்பட்டுள்ளது அப்பணத்திலே பெண்களின் மேம்பாட்டுக்கென ஒருபகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தகைய ஒரு நல்ல சந்தர்ப்பத்தை தமிழ்ப்பெண்கள் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள முயலவேண்டும். ஏனெனில் உழைப்பாளர்களை அரச இராணுவக் கெடுபிடிகளின் காரணமாக இழந்த பல குடும்பங்களின் சுமைகளைப் பெண்கள்தான் தாங்கிவருகிறார்கள். அந்தப் பெண்களுக்குரிய அடிப்படை உதவிகள், தொழிற்பயிற்சிகள், தொழிலுக்கான முதலீடுகள் போன்றவை சரியான முறையில், சரியான அளவில் கொடுக்கப்பட்டால்தான் அந்தக் குடும்பங்களால் தமது நிலைகளைச் சீர் செய்துகொள்ள முடியும். இவர்களைக் கைதூக்கி உயர்த்துவதன்மூலம்தான் நமது நாட்டை மேம்படுத்தலாம். ஆகவே பெண்களின் மேம்பாட்டுக்கான நிதியை சரியான அளவில், நியாயமான முறையில் வழங்குமாறு சந்திரிகா அரசுக்கு நாம் நெருக்கடியை அழுத்தத்தைக் கொடுக்கவேண்டும்.

கொழும்பிலுள்ள அந்தப் பெண்ணரசியின் மனதை நம் பக்கம் இழுப்பது நமது இல்லத்தரசிகளின் கைகளில், அவர்களின் ஒற்றுமையான, ஒன்றுபட்ட குரல் எழுப்பும் கோரிக்கையில்தான் தங்கியுள்ளது. பெண்களின் ஒருங்கிணைந்த சக்தியால் சாதிக்க முடியாதது எதுவுமேயில்லை.

## சுதந்திரத்தைத்தேடி . . .

''என்னடி லீவில வீட்டை விட்டாலும், வரச் சொன்ன நேரத்துக்கு முந்தியே வந்திடுவாய். இப்ப என்னடாவெண்டால் லீவு கேக்கப்போகிறன் எண்டிறாய். என்ன சொல்ல வேணும்? ஏதேனும் சொல்லுறதெண்டால் என்னட்டைச் சொல்லன், நான் போய்ச் சொல்லிவிடுறன்.''

என்றேன்.

''நல்லா இருக்கடி நீ சொல்லிறது. நீ வீட்டுக்குப் போக, உன்னை அம்மா பிடிச்சு வைச்சுக் கொண்டு 'எங்க என்ரை பிள்ளை நிக்கிறாள்? நானும் போய்ப் பாக்கப் போறன்' எண்டு சொல்ல, நீதான் வீணாக் கஸ்ரப்படுவாய். அது இருக்கட்டும். எல்லாம் சண்டை முடியத்தான். உன்ரை வேலை எல்லாம் எப்படி?''

என்று என்னைக் கேட்டாள்.

''எல்லாம் நல்லம்''

எனச் சிரித்துவிட்டு, அவளின் வீட்டுக் கதையைக் கேட்க வாயைத் திறந்தேன்.

''அதை இப்ப விடு எண்டெல்லோ சொன்னனான்''

என்று கூறிவிட்டு, பயிற்சி வாழ்க்கையைச் சொல்லிச் (பூநகரிச் சமருக்கான பயிற்சி) சிரிக்கின்றாள். பழையவைகளைப் பேசிக்கொண்டிருக்கும் போது 'லைன் அப்' என அறிவிக்கப்பட்டது. பறந்துவிட்டாள்.

பின்பு அவளை, சண்டை தொடங்கப்போகின்ற கடைசி நேரம் சந்தித்தேன். என்னைப் பார்த்துச் சிரித்துவிட்டு,

''இதுதான் கடைசி அடிபடுபோ, என்னவோ?'' என்று கூறினாள்.

''என்ரை கடைசி மூச்சுவரையும் சண்டை பிடிப்பன். காயப்பட்டிட்டன் எண்டு பின்னுக்கு வரமாட்டன். ஆமி முழுவதும் செத்திட்டான், முகாம் எங்களிடம் எண்டால்தான் நான் வருவன். அப்படி நான் காயப்பட்டாலும் என்னோடை இறங்கிற மருத்துவப் போராளியிட்டை மருந்து கட்டிக்கொண்டு நிண்டு அடிபடுவன், சண்டை முடிய வீடியோக் கொப்பியைப் பாரன், நான் என்னமாதிரி அடிபட்டனான்எண்டு. வீடியோ எடுக்கிற போராளி என்னை எப்படி எடுக்கிறா எண்டு பாரன்'' என்று சொல்லிப் போனவள் போனவள்தான்.

பூநகரித் தளத்தின் பெரும் பகுதி எம்மிடம் வீழ்ந்தது என்ற வெற்றிச் செய்தியுடன், விஜயாவின் வீரச்சாவுச் செய்தியும் கலந்து வந்து எம் காதுகளில் மோதியது. எப்படியெல்லாம் சிரித்துக் கதைத்து, பம்பபலடித்துவிட்டு, இந்த மண்ணின் வீரப் புதல்வியர் வரிசையில் அவளும் ஒருத்தியாய் ...... கல்லறையிலிருந்து கண் சிமிட்டும் வாசமலர்களுள் ஒன்றாய் ....

விஜயா நன்றாக சண்டை பிடித்தாளாம். உயிருள்ளவரை விடாது சண்டைபிடித்தாளாம் அவளுடன் நின்று சண்டை பிடித்த போராளிகள் பின்னர் இவ்வாறு சொன்னார்கள்.

''தமிழீழம் வரும்வரை போராடவேணும். இடையில எந்தக் கஸ்ரம் வந்தாலும் தமிழீழத்தை மறக்கக்கூடாது''

என்று அடிக்கடி அவள் வாயிலிருந்து கேட்ட நாம், இன்று அவளின் நினைவுடன் நேரான பாதையில்

-யோகா-

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

தென்தமிழீழத்தில்

# ஓர் மௌன அலறல்

## தொடரும் தாய்மாரின் அவலம்

மீன்பாடும் பாடலையே கேட்டு மகிழ்ந்திருந்த மக்கள் இன்று நாள் முழுவதும் மரண ஓலத்தையே கேட்டபடி வாழ்கின்றார்கள். அங்கு மக்களின் வாழ்க்கை என்பது அணுவணுவான சித்திரவதைகளுக்குள்ளும் அடுத்த கணம் என்ன நடக்கும், நாளை நிம்மதியாய் விடியுமா என்ற அச்சம் நிறைந்த, நொருங்கிப்போன எதிர்பார்புக்களோடும் கழிகிறது. சிறகுகளாற் குஞ்சுகளைக் காப்பதுபோல முன்னர் ஒருகாலத்தில் தாமரை பூத்துக் கலுங்கி நீர்தெரியாது நிறைந்த வாவிகளில் இப்போதெல்லாம் இனங்காண முடியாது உப்பிப்போன தமிழரின் பிணங்கள் மிதந்தபடி வருகின்றன. நன்னீர் ஆறும் உப்புக்கடலும் இன்று தமிழரின் குருதி தோய்ந்தவாறு ஓடிக் கொண்டிருக்கிறது.

தென் தமிழீழத்தின் திசைவெளியாவும் அடிக்கடி நிகழும் சுற்றிவளைப்புக்களும் சிறீலங்கா இராணுவத்தின் கோரமான படுகொலைகளும் என்ற செய்தியை ஒவ்வொரு நாளின் விடிவிலும் கேட்டபடி இருக்கின்றது. நிம்மதி என்ற சொல்லின் அர்த்தம் தொலைந்து போனவர்களாய் அவர்கள் வாழ்கிறார்கள்.

1990 இன் நடுப்பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா இராணுவத்தினருக்குமிடையே சண்டை மூண்டது. இராணுவ முகாம்கள் தமிழீழ மக்களின் குடியிருப்புக்களை ஆக்கிரமிக்கத் தொடங்கின. மூலைக்கு மூலை சிறீலங்கா இராணுவத்தின் தளங்களும் அவர்களின் நடமாட்டமுமே இருந்தன. காலை விடிவதற்கு முன்னர் அந்த மக்கள் இராணுவச் சுற்றிவளைப்புக்களால் உறக்கம் கலைந்து எழுகின்றனர். காலத் தேநீரைத் தயாரிக்கவெனப் பற்றவைக்கப்பட்ட அடுப்புக்கள் அரைகுறையுடனும், இன்னும் நித்திரை விட்டு எழும்பியும் எழும்பாமலும். . மக்கள் நிம்மதியான தூக்கத்தை மறந்தனர். நாளின் அரைவாசிப் பொழுதுகள் காட்டிலும், மிகுதி நேரங்கள் அடைபட்ட வீட்டிலுமாக அவர்கள் வாழ்க்கை துயரப்பட்டுப் போனது.

திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்களினால் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. அவர்கள் பரம்பரை பரம்பரையாக நெல் விதைத்த வயல்களை இன்று இவர்கள் எட்டியும் பார்க்க முடியாத நிலை. அவர்களின் வயல்களில் நெல்லு விளையவில்லை. மாறாக தமிழர்கள் ரயர்போட்டு எரிக்கப்படுகிறார்கள். அந்த மக்கள் மீன் பிடித்த கடல்களையும் ஆறுகளையும்விட்டு புலம் பெயர்ந்துகொண்டிருக்கிறார்கள்.

அங்கு பெண்களுக்கு நடக்கின்ற துன்பங்களும் சித்திரவதைகளும் மிக மோசமானவை. அங்குள்ள பெண்களுக்கு நடந்த கதைகள் உலகில் எந்த மனித உரிமை மீறல்களிலும் நடக்காதவை.

வந்தாறுமூலை அழகிய கிராமம். தை, மாசியில வயல்களில் நெற்கதிர் பூத்துக் குலுங்கும். வயற்காட்டுப்பக்கம் வாவிகளில் தாமரை காடாய்ப் பூக்கும். இது இராணுவ ஆக்கிரமிப்புக்களும் கிராம எரிப்புக்களும் நடப்பதற்கு முன்னர் இருந்த நிலை. ஆனால் இப்போது அது மயானம். ஒவ்வொருநாளும் அங்கு எந்த வீட்டிலாவது யாரும் இராணுவத்தால் காணாமற் போன அவலம் தெரியும். அல்லது எந்த வீடாவது அவர்களால் எரிக்கப்பட்டிருக்கும்.

அவள் பிறந்தது அந்த வந்தாறுமூலையிற்தான். அவளுக்கு அப்பொ பதினெட்டு வயது. அவளை தேசவிரோதி ஒருவன் சிறீலங்கா இராணுவத்துக்கு காட்டிக்கொடுத்ததன் பேரில் அவர்கள் கைதுசெய்து சென்றார்கள். அந்தப் பெண்ணை காட்டிக்கொடுத்தவன் தன்னைத் திருமணம் செய்யுமாறு கேட்க இவள் மறுப்புத் தெரிவித்தாள். விளைவாக அவளைப் பழிவாங்கும் நோக்குடனேயே காட்டிக் கொடுத்தான் இராணுவம்அவளைப் பிடித்து மோசமான சித்திரவதைகளுக்கு உட்படுத்தியது ஒன்றரை வருடங்களுக்குப் பின்பே அவளை விடுதலை செய்தார்கள். மிகமோசமான சிறை வாழ்க்கை. வயர், தடிகளால் கடுமையாகத் தாக்கப்பட்டிருந்தாள். ஆழமான வெட்டுக்காயங்களோடு வந்து சேர்ந்த போது அவளின் உடலிற் சில பகுதிகள் உணர்விழந்து போயின.

''ரவுண்ட்அப் என்று சொல்லி சிறுகுழந்தை தொடக்கம் வயது போன கிழவன், கிழவிவரை பிடித்துக் கொண்டு போவார்கள். கொண்டு போய் முண்டத் [தலையாட்டி] திட்டைக் காட்டுவாங்கள். அவன் ஆட்டினால் அவ்வளவுதான். பின்னர் அது பெண்ணோ, ஆணோ அவரின்நிலை படுமோசமாகிவிடும்'' என்றார் இன்னொருதாய்.

''இரவில் வந்து கதவு தட்டுவானுகள். திறந்தால் அப்படியே கொண்டு போய் விடுவாங்க. பின்னர் அந்த பிடிபட்டவர்களைக் காணமுடியாது. ஆறுமணியெண்டா நாங்கள் கதவைப் பூட்டிபோடுவம். பிறகு என்ன அவசரத்தேவைக்கும் வெளியிலை போக மாட்டம்,

எங்கடை வயலை எல்லாம் ஆமி எடுத்துப்போட்டான். நாங்கள் அப்பம் சுட்டுத்தான் சீவிக்கிறம். எங்கடை அம்மா ஒரு நாள் ஓலை பின்னிக் கொண்டு இருக்கேக்குள்ளை ஆமி வந்து கத்தியாலை தலையை வெட்டப்போனான். பிறகு அடிச்சுப்போட்டுப்போட்டாங்கள் அவவுக்கு ஐம்பத்தெட்டு வயது. சாகும் வயதில் இருக்கும் கிழவிமாருக்கும் அடிதான்'' என்றார் அந்தப் பெண்.

இவ்வாறு நாம் சந்தித்த பெண்களின் துன்பம் நிறைந்த கதைகள் இருந்தன. உழைப்பதற்கென சென்ற கணவன் உயிரோடு திரும்பிவராத சம்பவங்களால் காணாமற் போன தங்களது பிள்ளைகளால் அங்குள்ள பெண்கள் பாதிக்கப்பட்டுப் போனார்கள். கணவனை இழந்த தாய்மார்களின் எண்ணிக்கை தென்தமிழீழத்தில் கூடிக்கொண்டே போகிறது.

இராணுவத்தின் மிகவும் கொடுமையான விடயமாக பெண்கள் மீதான சிறீலங்கா இராணுவத்தின் பாலியற்துன்புறுத்தல், வன்முறை என்பவற்றால் பெண்கள் மிகுந்த தாக்கத்துக்குள்ளாகினர்.

பதினாறு வயதுடைய ஒரு பாடசாலை மாணவியைப் பாலியல் வன்முறைக்கு உட்படுத்திய சிறீலங்கா இராணுவம், அப் பெண்ணை மயானத்துக்குள் புதைத்துச் சென்றார்கள். இவ்வாறு அங்கு வாழும் பெண்களின் வாழ்க்கை மிகவும் சோகமானதொன்றாக இருக்கிறது.

இராணுவமுகாமுக்கு அண்மையாயுள்ள வீடுகளில் ஆண்களின் தலைக்கறுப்பைக் காணமுடியாது. ஒன்றில் அங்குள்ள ஆண்களை இராணுவம் கைது செய்து கொலை செய்திருக்கும். அல்லது அங்குள்ள ஆண்கள் காட்டில் தலைமறைவாகி வாழுகின்ற நிலை ஏற்பட்டிருக்கும்.

இதனால் அங்கு பெண்களே அதிகம். எந்த வேளையும் வீடுகளைப் பூட்டிய நிலையில், உள்ளுக்குள் உடைந்து போனவர்களாய், தாங்கள் இருக்கிறோம் என்பதை இராணுவம் அறியக்கூடாது என்ற அச்சத்தோடு வாழ்கிறார்கள்.

''உறவினர் யாரும் இறந்துவிட்டால் அழக்கூடாது. உடனே இராணுவம் வந்துவிடும். எங்கடை பிள்ளைகள் இயக்கத்துக்குப் போய் செத்தாலும் வெளியில் நாங்கள் அழக்கூடாது''

''எங்கடை கவலையெல்லாத்தையும் எங்களுக்குள்ளேயே மறைச்சு மௌனமாக அழுகிறம்''

என்றனர் அந்தப் போராளிகளின் தாய்மார்.

இந்தவகையில் அவர்கள் இந்தப் போராட்டத்துக்கு செலுத்திய விலை அதிகம். சொத்துக்களை வீடு, வாசல்களை இழந்து, வீட்டில் உறவினர்களை இழந்தது மட்டுமல்லாமல் அங்குள்ள தாய்மார், பெண்கள் நேரடியான இராணுவ வன்முறைகளையும் சந்தித்துள்ளார்கள்.

இவ்வளவு தூரம் அந்தத்தாய்மார், பெண்கள் இழப்புக்களைக் கொடுமைகளைச் சந்தித்தார்கள். வீடிழந்து, சொத்துக்கள் இழந்து, உறவினர்களை இழந்து, அவர்கள் நின்றாலும், உள்ளங்களில் உறுதியோடு நிற்கிறார்கள்.

- ஜெயஜோதி

---

அவன் அறைக்குள்ளே கீழும் மேலும் உலவினான்: எதையோ வெட்டித் தள்ளுவது மாதிரி-தன் இதயத்திலிருந்துஎதையோ வெட்டித்தள்ளுவது மாதிரி கைகளை வீசிக் கொண்டான். தாய் அவனைப் பீதியும் துக்கமும்கலந்த மனத்தோடுபார்த்தாள். அவனது இதயத்துக்குள்ளே ஏதோ ஒரு பலத்த காயம் ஏற்பட்டு, அவனை வேதனைப்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் அவள் உணர்ந்தாள். அந்தக் கொலையைப்பற்றிய இருண்ட, பயங்கர, ஆபத்தான எண்ணங்கள் அவனை விட்டுப் பிரிந்தன. நிகலாய் வெணோவ்ஷ்கோவ் அந்தக் 'குற்றத்தைச் செய்திராவிட்டால்,பாவெலின் நண்பர்களில் மற்றவர் எவருமே அதைச் செய்யக் கூடியவர்கள் அல்ல. பாவெல் தன் தலையைத் தொங்கப் போட்டாவாறு ஹஹோலின் பலம் பொருந்திய அழுத்தம் வாய்ந்த பேச்சைக் கேட்டவாறு இருந்தான்.

''தங்கு தடையற்று நீ முன்னேறிச் செல்லவேண்டுமானால் சமயங்களில் நீ உன் விம்பத்துக்கு மாறான காரியங்களைக் கூடச் செய்யவேணடும். அதற்காக நீ சகலத்தையும், உன் பரிபூரண இதயத்தையும் விட்டுக் கொடுக்கத்தயாராயிருக்க வேண்டும். கொள்கைக்காக நீ உன் உயிரை இழப்பது மிகவும் லேசான காரியம். அதைவிட மகத்தானவற்றை, உன்னுடைய சொந்த வாழ்வில் உனக்கு மிகவும் அருமையும் விருப்பமும் நிறைந்தவற்றைகூட நீ தியாகம் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட மகத்தான தியாகத்தினால்தான், நீ எந்த ஒரு சத்தியத்துக்காகப் போராடுகிறாயோ அந்தச் சத்தியம் எப்படி ஒரு மகா சத்தியாக வளர்ந்தோங்கிப் பெருகுகிறது என்பதை உன்னால் பார்க்க முடியும். அந்தச் சத்தியம்தான் இந்த உலகத்தில் உனக்கு மிகவும் அருமை வாய்ந்த, அரிய பொருளாக இருக்கும்"!

அவன் அறையின் மத்தியில் சட்டென நின்றான். முகமெல்லாம் வெளுத்துப்போய் கண்களைப் பாதி மூடியவாறு கையை உயர்த்தி அமைதி நிறைந்த உறுதியோடு மேலும் பேசத்தொடங்கினான்.

''மக்கள் தங்கள் அழகைத் தாமே பார்த்து வியக்கின்ற காலம். மற்றவர்களுக்கெல்லாம் தாம் தனித்தனித் தாரகைகளைப் போல் ஒளி வீசப்போகும் காலம் வரத்தான் போகிறது என்பது எனக்குத் தெரியும். அந்தப் புண்ணிய காலத்தில் உலகத்தில் சுதந்திர மனிதர்கள் நிறைந்திருப்பார்கள்; அந்த மனிதர்கள் தமது சுதந்திரத்தால் பெருமை அடைவார்கள். சகல மக்களின் இதயங்களும் திறந்த வெள்ளை இதயங்களாக இருக்கும். அந்த இதயங்களில் பொறாமை இருக்காது; பகைமையைப் பற்றிய அறிவு கூட இருக்காது. அப்போது வாழ்க்கை என்பது மனித குலத்துக்கான மகத்தானசேவையாக மாறிவிடும்; மனிதனது உருவம் மகோன்னதச் சிகரத்தில், வானத்தை முட்டும் கொடுமுடிவரையில் உயர்ந்து சென்று கொலு அமரும். ஏனெனில் சுதந்திர புருஷர்களுக்கு எந்தச் சிகரமும் எந்த உயரமும் எட்டாத தூரமல்ல; தொலைவல்ல. அப்பொழுது, மக்கள் அனைவரும் அழகின் பொருட்டு சத்தியத்தோடு, சுதந்திரத்தோடு வாழ்வார்கள். உலகத்தைத் தங்களது இதயங்களால் பரிபூரணமாக அதிகப்படியாகத்தழுவி,அதனை முழுமனத்தோடு காதலிப்பவர்களே அந்த மனிதர்களில் மகோன்னதப் புருஷர்களாக விளங்குவார்கள்; எவர் மிகுந்த சுதந்திரமாக வாழ்கிறாரோ அவரிடமே மகோன்னதமான அழகு குடி வாழ்கிறது. அவர்களே அந்தப் புத்துயிரின் புண்ணிய புருஷர்கள்; மகாபுருஷர்கள்!''

அவன் ஒரு நிமிஷ நேரம் மௌனமாயிருந்தான். பிறகு மீண்டும் நிமிர்ந்து நின்றுகொண்டு, தனது ஆத்மாவின் அடித்தளத்திலிருந்து எழும் குரலோடு பேசத்தொடங்கினான்; ''அந்தப் பெரு வாழ்வுக்காக நான் எதையும் செய்யச் சித்தமாயிருக்கிறேன்.''

மாக்ஸீம் கார்க்கியின்
'தாய்' என்ற நூலிலிருந்து

# நம்பிக்கையின் இருப்பிடம்

ஓமந்தை பிரதான வீதியிலிருந்து உள்நோக்கிச் செல்லும் ஒரு சிறிய கரடுமுரடான வீதி. இருமருங்கிலும் அடர்ந்து வளர்ந்த காடுகள். நான்கு மைல்கள் உள்நோக்கிச் சென்றுகொண்டிருந்தோம். இடையே தகரக் கூரையின்கீழ் ஒற்றைக்கிடுகால் நாற்புறம் மறைக்கப்பட்ட ஒரு குடிசை ஒரு இளம் பெண்ணும், அறுபது வயது மதிடபிடத்தக்க தாயாரும் எம்மை வரவேற்றார்கள் பசுப்பால் தந்து உபசரித்தார்கள். பாலைப் பருகிக் கொண்டே அம்மாவிடம் கதைகொடுத்தோம்.

''நான் பிள்ளை 'உணங்கா முடியிட ஒன்பதாவது தலைமுறை. எனக்கு இப்ப ஐம்பத்து ஐந்து வயது. நான் கலியாணம் செய்யமுன்னமே ஆச்சியும் அப்புவும் பிரிஞ்சிட்டினம். அப்பு எங்களோட தான் இருந்தவர். நாங்கள் மூன்று பொம்பிளையளும் ஐந்து ஆம்பிளையளும். ஆம்பிளைப்பிள்ளையள் எல்லாம் கலியாணம் செய்து போட்டினம். நானும், தங்கச்சியுந்தான். அப்புவுக்கும் கண் தெரியாமல் ஏலாமல் வேணும். ஒருதருமில்லை. நானே எங்கட வண்டியில் மாட்டைப் பூட்டிக்கொண்டு போனன். அப்பு சொன்னார் ''நாம்பன் மாடுகள் பொல்லாதது. நீ சமாளிக்க மாட்டாய். அதுகள் பிடிச்சுப் பிரட்டிவிட்டிடுங்கள்'' எண்டு. நான் 'நீ பயப்பிடாதயணை அப்பு' எண்டு போட்டு போய் ஏத்தி வந்தன் தங்கச்சியோட சேர்ந்து கம்பி இழுத்து வேலி அடைச்சன்.

போட்டுது. நாங்கள் ரெண்டு பேரும் வெள்ளாப்போட எழும்புவம் எழும்பி சமைச்சு வைச்சுப்போட்டு பட்டியடிக்குப் போய்விடுவம், பட்டியில நூறுமாடுகள் இருந்தது. போய் பட்டியிலை எரு அள்ளி துப்பரவாக்கிப் போட்டு இருபத்தஞ்சு பசுக்களிலை பால் எடுப்பம். தேவையானதை எடுத்துடபோட்டு மிச்சத்தை நெய் போடுவம். இரண்டு பேருமாத்தான் மாட்டுக்குக் குழை வெட்டி வைக்கல் போட்டு, தண்ணி வச்சு, என்ன செய்தாலும்.

அந்த நேரம் வேலி அடைக்கிறதுக்குக் கம்பிக் கட்டை வெட்ட ஆக்கள் இல்லை. நான் காட்டுக்குப் போய் கம்பிக்கட்டைவெட்டினன் ஏற்றதுக்கு வண்டில் கட்ட

அதுக்குப் பிறகு பட்டியளக் கவனிக்கிறதோட, காட்டுக்குப் போய் கதியால், கம்பிக்கட்டை எண்டு ஏத்தி வந்து கேட்கிறவயளுக்குக் குடுக்கத் தொடங்கினன் ஒரு நாளைக்குப் போனன் எண்டால் கம்பிக்கட்டையெண்டா பெரிய மரம்) நூறு கட்டையும், கதியால் எண்டா (சிறிய மரம்) முன்னூறும் வெட்டுவன்.''

''அப்ப எத்தின வயதில நீங்கள் திருமணம் செய்தீர்கள்?''

''முப்பத்தஞ்சு வயசில கலியாணம் செய்தனான். இரண்டு பொம்பிளைப் பிள்ளையள். கலியாணம் செய்து மூன்று வருசத்தால அவர் பிரிஞ்சுபோயிட்டார். அதுக்குப் பிறகுதான் வயலும் செய்ய வெளிக்கிட்டனான். எட்டு ஏக்கர் வயல் காணி இருக்கு. எட்டு ஏக்கரையும் நானே உழுதன். அதுக்குப் பிறகு மறுத்தன் (இரண்டாவது முறை குறுக்காக உழுதல்). மறுத்துப்போட்டுப் பல கையடிச்சன் (மேடு பள்ளமாக உள்ள தரையைச் சமப்படுத்தல்). பிறகு நெல்லை விதச்சு விதைப்புமுடிய மூண்டு முறை பசளை எறிஞ்சு, பராமரிச்சு அறுவடை செய்வன். என்ர காணி முழுக்க நான்தான் களவோ எடுக்கிறன். நான் உழைச்சு என்ர பிள்ளையளைப் பார்க்கிறன். ஆனா வயித்தெரிச்சல் வேலை எல்லாம் செய்வாங்க. பட்டியில நிக்கிற மாடுகளை அறுத்து விடுவாங்கள். மாட்டை அடிச்சு கிணத்துக்கை போடுவாங்கள். ஒரு முறை வெள்ளாமையை வீட்டுக்குள்ளை அடுக்கியிருக்கேக்கை வீட்டுக்கு நெருப்பு வச்சிட்டாங்கள். அவ்வளவும் எரிஞ்சு சாம்பலாப் போச்சுது. அதோட நல்லாய் கஸ்ரப்பட்டுப்போனன். 1989 ம் ஆண்டு பட்டியில உள்ள மாடு ஒண்ட அறுத்துவிட்டுட்டாங்கள். அப்ப மாட்டத் தேடிப் போன நேரம்தான் சைக்கிள் ஓடப் பழகினனான்''

''உங்களைப் போல உங்கள் பிள்ளைகளுக்கும் இந்த வேலைகளைப் பழக்கியுள்ளீர்களா?''

''மூத்தமகள் ஈடுபாடு இலலை. ரெண்டாவது எல்லா வேலையும் செய்யும். வண்டி பூட்டுறதில் இருந்து, பட்டை அடிப்பது, உழுவது எல்லாம் செய்வாள் ஆனல் நான் கடைசிக் காலம் வரை பிள்ளையளை நம்பி இருக்க மாட்டன். அதை ஒரு இடத்தில கட்டிக்குடுத்திட்டு அங்கால எனக்கு ஒரு ஏக்கர் காணியில விதைச்சன் எண்டால் போதும் சாகும் வரைக்கும் நான் தவண்டு தவண்டாவது வயல் செய்வன். பிள்ளையளிட்டப் போக மாட்டன்.''

''இவ்வளவு வேலைகளையும் நீங்கள் தனியாகச் செய்து வருகிறீர்களே! எவ்வளவு கடினமானது ?''

''என்ர ரெண்டாவது மகள் இருக்கேக்க என்னோட சேர்ந்து எல்லாம் செய்வாள். இப்ப அவள் போனாப்போலதான் பழையபடி தனியாகச் செய்யிறன். ஆனாலும் இது பெரிய கஸ்ரமில்லை பிள்ளை. இதெல்லாம் கஸ்ரமெண்டால் நாங்கள் உலகத்திலை வாழ ஏலாது. நீங்கள் துவக்குத் தூக்கி சண்டைபிடிக்கையில்லையோ? அதுபோலத்தான் நானும் கலப்பை மாடுகளோடயும், சண்டைபிடிக்கிறேன். சண்டை பிடிக்காமல் ஒண்டும் எங்களுக்குக் கிடைக்காது பிள்ளை. நல்லாச் சண்டை பிடிக்க வேணும். அப்பதான் பயனைப் பெறலாம்.''

''நீங்கள் இப்படியெல்லாம் செய்வதைப்பார்த்து உங்கள் கிராம மக்கள் ஏதும் கூறுவது இல்லையா?''

''எனக்கு முன்னாலை ஒருத்தரும் கதைக்கமாட்டினம். நான் என்ன அவயர் வீட்டில வெட்டுவன். ஒரு ஏக்கரை மூன்று நாளைக்குள்ள தட்டத்தனிய வெட்டிமுடிப்பன் வெட்டி, என்ர மாட்டாலேயே சூடடிச்சு, வண்டி பூட்டி வெள்ளாண்மையை வீட்டுக்குக் கொண்டு வருவன். இந்த முறையும் செய்திருக்கிறன். இப்ப பசளைக்குத்தான் தட்டுப்பாடாகக் கிடக்கு அதுதான் தேடித் திரியிறன், பசளை கிடைச்சுதெண்டால், வெள்ளாண்மை வீட்டுக்கு வந்ததுக்குச் சரி''



''இதெல்லாம் கஸ்ரமெண்டால் நாங்கள் உலகத்தில வாழ ஏலாது நீங்கள் துவக்குத் தூக்கிச் சண்டை பிடிக்கேல்லையோ? அதுபோலதான் நானும் கலப்ப மாடுகளோடயும் நிலத்தோடயும் சண்டைபிடிக்கிறேன்''

அம்மாவின் தோளோடு தோள் நின்று உதவிய மகள் இப்போது களத்திலே துப்பாக்கியும் கையுமாக சகதோழிகளின் தோளோடு தோள் நின்று எதிரிக்குக் குறிபார்த்து நின்றாள். அந்தப் பெருமையை நினைத்து நினைத்துச் சந்தோசப்பட்டவளாக அம்மா தனது தள்ளாத வயதிலும் தளராத தன்னம்பிக்கையின் இருப்பிடமாக உறுதியுடன் உழைத்து வருகின்றாள்.

- உலகமங்கை

---

தனக்காகவோ தனது வாழ்க்கையும் இளமையையும்எண்ணியோ அவள் வருந்தவில்லை.ஏனென்றால், தன்னைவிட முக்கியமான ஒன்றைப் பற்றியே அவள் ஓயாது சிந்தித்துக்கொண்டிருந்தாள். அவளுடைய மகன் அனாதையாக தன்னந்தனியாக அவளுடைய நோயற்ற தாயிடம் இருந்தான். யுத்தத்தில் அவன் என்ன துன்பங்களை அனுபவித்தான்,அதன்பின் அவனது வாழ்க்கை எப்படி அமையும் என எண்ணமிட்டுக் கொண்டிருந்தாள் ரீதா

வஸ்கோவ்விரைவில் திரும்பி வந்தான். கிளைகளை அகற்றி விட்டுப் பேசாமல் அருகே உட்கார்ந்தான். அடிபட்டகையைப் பிடித்துக் கொண்டு, அசைந்தாடினான். ''ஜேனியா கொல்லப்பட்டு விட்டாளோ?''

அவன் தலையை ஆட்டினான் பின் சொன்னான் ''நாம் சாமான் மூட்டைகளைக்காணோம். மூட்டைகளும் இல்லை துப்பாக்கிகளும் இல்லை. ஜெர்மனியா ஒன்றாய் எடுத்துப் போட்டார்கள் இல்லாவிட்டால் மறைத்து வைத்திருக்கிறார்கள்.

''உடனே'' என்றான் வஸ்கோவ் அவன் சொன்னது உண்மை அல்ல என்பதை அவள் உணர்ந்தாள் 'அவர்கள் போய் விட்டார்கள் சுரங்க வெடிகளை எடுத்து வருவதற்காக என்று தோன்றுகிறது... அவளுடைய மங்கிய, எல்லாவற்றையும் புரிந்து கொண்டபார்வையை அவனுடைய விழிகள் சந்தித்தன. ''அவர்கள் நம்மை வெல்லவில்லை,புரிந்துகொண்டாயா? நான் இன்னும் உயிரோடு இருக்கிறேன். என்னை வீழ்த்தியாக வேண்டும் இன்னும்'' என்று கத்தினான்

பற்களை நெரித்தவாறு கைவலியைப் போக்கும் பொருட்டு அசைந்தாடிக்கொண்டு அவன் பேசாதிருந்தான்.

''வலிக்கிறதோ ?''

'எனக்கு இங்கை வலிக்கிறது என்று நெஞ்சை விரலால் சுட்டினாள்

வஸ்கோவ் இங்கே கொடியவலி எடுக்கிறது. பொறுக்க முடியாதவலி உங்கள் எல்லோரையும் மாய்த்து விட்டேன். ஐந்துபேரையும் மடித்தேனே எதற்காக? ஒரு பத்து ஜேர்மனியருக்காகவா?''

''அட எதற்காக நீ இப்படி அலட்டிக் கொண்டிருக்கிறாய் எல்லாம் புரிந்துதானே யுத்தம்''

'யுத்தம் நடக்கிறவரையில் புரியும். பிறகு சமாதானம் வந்ததுமோ? நீங்கள் ஏன் சாகநேர்ந்தது என்பது புரியுமா? நான் இந்த ஜெர்மனியர்களை ஏன் மேலே போகவிடவிலலை? எதற்கக அப்படி முடிவு செய்தேன் என்பது விளங்குமா? என்ன ஐயா நீங்கள் ஆண்பிள்ளைகள். எங்கள் தாய்மாரைத் துப்பாக்கிக் குண்டுகளிலிருந்து காக்கமுடியாமல் போய்விட்டீர்கள்''

நன்றி 'அதிகாலையின்அமைதி'




பூத்துக் குலுங்கும் நெல் வயலும், பசுமை நிறைந்த பனை மரங்களும், பார்ப்பவர் மனங் கவரும் கடலும், கடலுடன் சேர்ந்த கண்ணகி அம்மன் கோயிலும், தம்மையே அறியாது தம் மனங்களைப் பறிகொடுக்கும் பக்தர் கூட்டமும்தான் அவ்வூரின் சிறப்பு. அப்படி எல்லோரையும் தன் வசம் இழுக்கும் அந்த ஊர்தான் உதயராணியின் ஊர். அது... புங்குடுதீவு.

1966 01. 17 அன்று செல்லையா, உருத்திரா தேவியர் தம்பதிக்கு புத்தம் புது மலராக வந்துதித்தாள் உதயராணி. அவர்களின் மூன்றாவது மகளான இவள் புதுப்பொலிவுடன் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தாள். இவள் தனது ஆரம்பக் கல்வியை புங்குடுதீவுப் பாடசாலையிலும் உயர் தரக் கல்வியை கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் பயின்றாள் தனது மேற்படிப்பைப் பட்டப் படிப்புகள் கல்லூரியில் கற்றுக்கொண்டிருக்கும்போதுதான் அந்த எண்ணம் தோன்றியது. நீண்ட காலமாக நீறு பூத்த நெருப்பாக அவள் உள்ளத்தினுள்ளேயே இருந்த எண்ணம் அவள் தன் படிப்பை முடித்ததும் நிறைவேறியது.

தாய்போல நேசித்த தாய் மண்ணை அந்நியனிடம் இனியும் விட முடியாது என்றெண்ணியவள் புறப்பட்டாள் புலியாக. இனி அவள் கிளி அல்ல. புலியே.

படிப்பிலே படு சுட்டியாக இருந்த இவள் விளையாட்டிலும் துடியாட்டமாகவே இருந்தாள். குண்டெறிதல், தட்டெறிதல் சான்றிதழ்கள் எல்லாமே இவளின் கைக்கே வரும்; அதுபோலவே பயிற்சிப் பாசறையிலும் சுட்டிகையாகவே இருந்தாள்.

ஒரு நாள் காலை. பாசறை மைதானத்திலே ஓடிக்கொண்டிருந்த அவளுக்கும் தோழிக்குமிடையே ஒரு உரையாடல்.

''எடி விஜயா. ஓடக் களைக்குது. இந்த முறை நிண்டுவிட்டு அடுத்த றண்ணோடை ஓடுவமே?''

''என்னடி நீ என்ன சின்னப் பிள்ளையோ? அக்காமார் ஆரும் உன்னை வீடு தேடிவந்து இயக்கத்துக்கு வா எண்டு கூப்பிட்டதோ?''

என்று ஆரம்பித்து, இயக்கத்தையும் பயிற்சி எடுப்பதன் முக்கியத்துவத்தையும் பற்றி ஓடிக்கொண்டிருக்கும்போதே ஒரு குட்டிப் பிரசங்கம் செய்துவிட்டாள். இதைக்கேட்டதோழி மறுபேச்சுப் பேசாமல் ஓடினாள்.

இப்படி எதையுமே யோசித்து முடிவெடுக்கும் இயல்பைக் கொண்டவள் அவள்.

அன்றொரு நாள் தன் அறைத் தோழி ஒருத்தியிடம் அன்றைய வகுப்பில் பயிற்சியாசிரியர் கற்பித்ததைப்பற்றிக் கதைத்து அலசிக்கொண்டிருந்தபோது ஒரு விசில் சத்தம். எல்லோரும் விழுந்தடித்துக்கொண்டு வரிசையாக நின்றார்கள். உடனேயே வராவிட்டால் தண்டனையில் ஓடு பாதையில் ஓடவேண்டுமே!

அணியின் முன் வந்த பயிற்சி ஆசிரியர், ''எல்லோரும் கிச்சினுக்குப் போங்கோ. எல்லோருக்கும் புண்ணாக்குத் தரப்போறன்''

என்றார். விஜயாவின் அறைத் தோழி விஜயாவைப் பார்த்து, ''என்னடி? எங்களைப் பார்க்க ஆடு, மாடு மாதிரியே கிடக்குது? புண்ணாக்குத் தரப் போகினமாம்''

என்றாள். அதற்கு அவள், ''நீ ஏன் இப்படி அவசரப்பட்டு கண்டதையும் நினைச்சுக் கஸ்ரப்படுறாய்? ஏதாவது எங்களுக்குத் தெரியாத சாப்பாடாகவும் இருக்கலாமெல்லோடி? இப்படியெல்லாம் நினைக்காமல் லைனுக்கு வா. உன்ரை கேள்விக்கு அங்க பதில் கிடைக்கும்''

என்றாள் அங்கே சென்றவுடன் உண்மை நிலை புரிந்து விட்டது. புண்ணாக்கு எனப்படும் எள்ளினால் ஆன உணவு தரப்பட்டது. விஜயாவைப் பார்த்து அசட்டுச் சிரிப்புடன் தலையாட்டினாள் தோழி

இப்படிச் சிரிப்பும் பயிற்சியுமாக நாட்கள் கழிந்து கொண்டிருந்தபோதுதான் கோட்டைக்குச் செல்வதற்காக அழைப்பு வந்திருப்பதாக எமக்கு அறிவிக்கப்பட்டது. இரவு பகலாக அங்கே கோட்டை வாசலையே நோக்கியபடி ஏந்திய துப்பாக்கிகளுடன் காவல் நின்ற எம் மூத்த சகோதரிகளுக்குத் துணையாக நாமும் அங்கே சென்றோம். எமக்குத் தரப்பட்ட வேலைகள் பதுங்குகுழி வெட்டுவது, காப்பகழிகளை அமைப்பது என்பனவேயாகும்.

அங்கே எனக்கு அடுத்த குழுவினருடன் நின்ற இவள் இடையிடையே என்னையும் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும், அப்படி ஒரு நாள் சந்திக்கும் போதுதான் நான் கேட்டேன்,

## கப்டன் பூமகள் / விஜயா



உதயராணி செல்லையா
புங்குடுதீவு

பிறப்பு:- 1966-01-17
வீரச்சாவு:- 1993-11-11

''என்னடி விஜயா? அடிபாட்டுக்கு எண்டு கூட்டி வந்து, இஞ்சை என்ன மண்வெட்டியோடையும் பிக்கானோடையுமோ அடிபாடு நடத்திறது?''

இந்தக் கேள்விக்கு அவள் தந்த பதிலை இன்று நான் மட்டுமல்ல, அன்று எம்மோடு நின்ற இன்னும் பலரும் கூட ஞாபகத்தில் வைத்திருக்கின்றார்கள்.

''சுவர் இருந்தால்தான் சித்திரம் கீறலாம். அத்திவாரம் ஒழுங்காக இருந்தால்தான் கட்டிடம் பலப்பா நிக்கும''

என்றாள். உடனே நான்,

''சுவர் மறைவு இருந்தால் மணியா அடிபடலாம்''

என்றேன். என் பதிலைக் கேட்டு அவள் மகிழ்வுடன் சிரித்தாள். இப்படிச் சின்னச் சின்னச் சிரிப்புகளுடனும் வேலைகளுடனும் நாட்கள் போய்க்கொண்டிருந்தபோது திரும்பவும் பயிற்சிப் பாசறைக்குச் செல்வதற்காக அழைப்பு வந்தது. மீண்டும் அங்கே சென்று பயிற்சியைத் தொடர்ந்தோம். பயிற்சி முடிவுக்கு வந்துவிட்டது.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறைக்குப் பிரிக்கப்பட்டனர். அப்போது விஜயாவின் பெயர் மருத்துவப் பிரிவில் வந்துவிட்டது. இதை அறிந்த விஜயாவின் முகம் போன போக்கை வார்த்தைகளால் சொல்ல முடியாது விஜயாவின் முகம் மாறியதை அறிந்த எங்களின் பயிற்சி ஆசிரியர் கப்டன் திலகா விஜயாவைக் கூப்பிட்டு

''என்ன விஜயா? ஒரு உயிரைக் காப்பாற்ற உங்களுக்கு விருப்பமில்லையோ? இயக்கத்தில் இதுவும் வேலைதான். இதுவும் சண்டை பிடிப்பது போல முக்கியமானதுதான்''

என்றார்.

கனவு நினைவெல்லாம் சண்டையைப் பற்றியே எண்ணிக்கொண்டிருந்தவளின் எண்ணத்தில் மண் விழுந்தது. அவள் இதயத்திலே சிறு புயல் வீசி ஓய்ந்தது. ஆனாலும் சமாளித்துக் கொண்டு,

''செய்கிறேன் அக்கா''

என்றாள். அன்றுமுதல் அவள் மருத்துவப் போராளிகளுக்குரிய பயிற்சிக்குத் தன்னை உட்படுத்தினாள். மூன்று மாதகாலம் இடைவிடாத படிப்பில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியவள் நல்ல மதிப்பெண்களைப் பெற்றதுமட்டுமல்ல, நல்ல மதிப்பையுமே பெற்றிருந்தாள்.

சிறந்த ஓர் மருத்துவப் போராளியாக வெளியேறினாள். எந்த ஒரு பிரிவானாலும் அதிலே முழுமையான அறிவைப் பெற்றிருக்கவேண்டுமெனப் பேரவா கொண்டவள் அவள். அவளின் எண்ணம் அப்போது நிறைவு செய்யப்படமுடியாது போனாலும், தற்போதைய மருத்துவப் போராளிகள் முழுமையான ஓர் பூரண அறிவைப் பெற்றிருக்கின்றார்கள். செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அவளது அன்றைய எண்ணம் இன்றைய போராளிகளால் நிறைவு செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றது. 'எந்தத் துறையானாலும் எந்தப் பிரிவானாலும் அதில் பெண்- ஆண் என்ற பேதம் கூடாது' என்ற கொள்கையுடையவள் அவள். 'எல்லோருமே விடுதலைப்புலிகள்' என்று சொல்பவள்.

நீண்ட காலமாக கனவு கண்டதைப் போல் அன்று அவளை அழைத்து,

''நீ குறாப்புக்குப் போகவேண்டுமெண்டு நிக்கிறாய் சரி நீ இண்டையிலிருந்து குறுப்போடை போய் நில். உன்ரை மெடிக்ஸ் சாமான்கள் எல்லாத்தையும் பொறுப்பாளரிட்டை ஒப்படைச்சிட்டு வா. நான் றைபிள் தாறன்''

என்றார் தளபதி. அவளின் சந்தோசத்துக்கு அளவே இல்லை. காணுகின்ற எல்லோரிடமும் தான் சண்டைக்குப் போகப் போகிற விடயத்தையே சொல்லிக்கொண்டிருந்தாள்.

அவளின் முதலாவது அடிபாடு கட்டைக்காடு ஆயுதக்கிடங்கு எம்மால் கைப்பற்றப்பட்ட அடிபாடுதான். இவ்வளவு நாளும்கூட அவள் எத்தனையோ சண்டைகளில் பங்குபற்றியிருக்கிறாள். ஆ. க. வெ தாக்குதல், மின்னல் போன்ற மிக முக்கியமான தாக்குதல்களில் அவள் மருத்துவப் போராளியாகக் களம் கண்டவள். இப்போதுதான் இராணுவத்தோடு நேரடியாக மோதினாள். இதுதான் அவள் அன்றும் இன்றும் களம் செல்வதில் உள்ள வித்தியாசம். பலாலி 150 மைல் நீளமான காவலரண்கள், அப்படியே தொடர்ந்து அளவெட்டி, மண்கிண்டிமலை, புலோப்பளை எனப் பல சண்டைகளுக்குச் சென்று வந்தாள். பூநகரி அடிபாட்டுக்கான பயிற்சியில் ஈடுபட்ட போராளிகளுடன் தன்னையும் இணைத்துக்கொண்டாள். அப்போதுதான் அவள் என்னைச் சந்தித்தாள்;

''எப்படிப் போகுது? முகம் ஒரு மாதிரி இருக்குது. என்ன ஏதும் வருத்தமோ?''

நான் கேட்டேன்;

''வருத்தமோ? அப்படியொண்டும் இல்லை. இருந்தாப் போலை அம்மான்ரை யோசினை வந்திட்டுது. அதுதான் இந்தச் சண்டை முடிய ஒருக்காப் போய் எல்லோரையும் பாத்துவிட்டு வரவேணும்.''

என்றாள். அதற்கு நான்,

(09ம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின்



எனது தேசத்தின் எதிர்காலச் சிற்பிகளாக ஒரு புதிய இளம் பரம்பரை தோற்றம் கொள்ளவேண்டும். ஆற்றல் மிகுந்தவர்களாக, அறிவு ஜீவிகளாக, தேசப்பற்றாளர்களாக, போர்க்கலையில் வல்லுனர்களாக நேர்மையும் கண்ணியமும் மிக்கவர்களாக ஒரு புதிய புரட்சிகரமான பரம்பரை தோன்றவேண்டும்.

– தேசியத்தலைவர்

தமிழீழத்தின் மீதான சிறீலங்கா அரசின் தொடர்ச்சியான யுத்தநடவடிக்கை எமது இனத்தின் தேசிய எழுச்சியை வேரோடு பிடுங்கி எறிய முற்படுவது இன்று உலகறிந்த விடயம் ஆனால் இந்த யுத்தத்திணிப்புக்கு அடிபணியாது எமது மக்கள் தமிழீழ தேசிய விடுதலையை நோக்கிய முனைப்போடு நடைபோடுவதை நம் பார்க்கின்றோம். எனினும் மேலும் வெற்றிகளைக் குவிப்பதுவே எமது தேசிய விடுதலைப் போராட்ட இலக்கை நாம் அடைந்துகொள்ள வழிவகுக்கும்.

பெரிய அளவில் இன அழிவை ஏற்படுத்துவதும், தமிழர் நிலத்தைப் பறித்தெடுப்பதும், தமிழரின் சொத்துக்கள், வளங்களை அழிப்பதும், தமிழ் மக்களின் வாழ்க்கை நடப்பின் இயல்பு நிலையை இழுத்து நிறுத்துவதும் எதிரியினுடைய பிரதான செயற்பாடாகவுள்ளது. இதனூடாக பஞ்சம், பசி, பட்டினி, வேலையின்மை, விரக்தி, ஒழுக்கக்கேடு மலிந்த சீர்கேடான மிக இழிவான சமுதாயப் பண்பை எம்மத்தியில் தோற்றுவிப்பது எதிரியின் நோக்கமாகவுள்ளது.

இத்தகைய பாரதூரமான பின்விளைவுகளை களைய வேண்டுமாயின் பாதிப்புகளை இனங்கண்டு, அவற்றுக்கான புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்வது எமது போராட்டப் பணியோடு இணைந்துவிட்ட பணியொன்றாகும் காலத்தின் தவிர்க்கமுடியாத தேவையாகிவிட்ட இப்பணிக்கு ஒவ்வொரு சமுதாயமும் முழுமனதோடு ஒத்துழைக்கவேண்டியதும் அவசியமாகும் இந்த வகையில் எமது இனத்தின் மீட்சிக்கான தூர நோக்கோடு எமது தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் 1990 ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் நிறுவி வைத்த விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் இப் புனர்வாழ்வு நிறுவனமாகும்.

உழைப்பாளர்களை இழந்த தாயானவள் தனித்து நின்று தாங்கிச் செல்லும் குடும்பங்களுக்கு புனர்வாழ்வுப்பணி செய்து, இக்குடும்பங்களை சமுதாய மேம்பாட்டோடு இணைத்துவிடுவது இதன் தலையாய பணியாகவுள்ளது. மேலும் சமுதாய, குடும்ப அழுத்தங்களால் ஒடுக்கப்படுபவர்களுக்கும், அநாதரவான பெண்கள், சிறுமியர்களுக்கும் மத்தியிலும் தனது பணியை விரிவுபடுத்தியுள்ளது.

## தாய்மார்களின் தலையில் இரட்டைச் சுமை

சாதாரணமாக குடும்பம் என்று கூறும் பொழுது தாயும் இருப்பார், தந்தையுமிருப்பார். குடும்பத்தின் சுமையை இருவரும் சேர்ந்து தாங்கிக்கொள்கிறார்கள் அல்லது ஏதோ ஒரு வகையில் சுமையைப் பகிர்ந்துகொள்கிறார்கள். ஆனால் சிறீலங்காவின் இராணுவ நடவடிக்கையால் பெரும் எண்ணிக்கையிலான குடும்பங்கள் தமது கணவனை அல்லது தந்தையை அல்லது சகோதரனை இழந்துள்ளன- இந்தநிலையில் தாயானவள் இதுவரை தந்தைதாங்கிய அல்லது மகன் தாங்கிய சுமையைச் சேர்த்து தன் தலையில் சுமக்கவேண்டியுள்ளது.

## சிறீலங்காவின் கடல்வலயப் பாது காப்புச் சட்டமும் இராணுவ நடவடிக்கைகளும் ஏற்படுத்திய சுமைகள்

சிறீலங்காவின் கடல்வலயப் பாதுகாப்புச் சட்டம் நடைமுறையிலுள்ள கடந்த பத்து ஆண்டுகளாக கரையோர மீனவக்குடும்பங்களில் 90% ஆனவர்கள் தமது தொழிலினை இழந்துள்ளனர். வருமானத்தை இழந்து வறுமையில் வாடுகின்றனர்; தொழிலுக்குச் சென்ற ஆயிரக்கணக்கானவர்கள் அன்றாடம் கடலில் கொல்லப்பட்டுள்ளனர். இந்த மீனவர்களின் உடமையான வலை, வள்ளம் என்பன பறித்து எரிக்கப்பட்டுள்ளன, அல்லது கடலுக்குள் மூழ்கடிக்கப்பட்டுள்ளன. பெறுமதி மிக்க தொழில் சாதனங்களையும் இழந்து மேற்கொண்டு எதுவும் செய்யமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

## இராணுவ விரிவாக்க வீதம்

எமது தாயகத்தின் மீதான முற்றுகையைப் பலப்படுத்தும் நோக்கில் இராணுவத் தளங்கள் விரிவுபடுத்தப்பட்டுவருகின்றன. எமது மக்களின் வசிப்பிடங்கள் இராணுவத்தினுடைய பிடிக்குள் சென்றுவிடுகின்றன. மக்கள் தமது சொத்துச் சுகங்களை இழந்து இடம்பெயர்கின்றனர். எதிரியினுடைய எறிகணை வீச்சுதுப் பாக்கிவேட்டு ஆயிரக்கணக்கானவர்களின் உயிரைக் குடித்துவிட்டது. வீட்டை இழந்தனர். நிலத்தை இழந்தனர். தொழிலை இழந்தனர், உயிரைப் பிரிந்தனர் இப்படியாக எத்தனையோ சிரமங்களில் காலதிகாலமான, உயிர்த்துடிப்பான அதற்கேயுரிய தனித்துவமான வரலாற்று இயக்கம் தடைப்பட்டு விட்டது. திட்டமிட்டு அழிக்கப்பட்டது: இப்பொழுது அந்த மக்கள் வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் இடம்பெயர்ந்தோர் தங்ககங்களில் முடங்கிப்போயுள்ளனர்.

மேலும் நாளாந்த எறிகணைவீச்சு, விமானக் குண்டு வீச்சு, சுற்றிவளைப்புக்கள், பெயர் சூட்டப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் உட்பட எதிரியின் நடவடிக்கை இன்று எமது தாயகத்தில் அண்ணளவாக இருபத்தையாயிரம் இளைஞர்களை, குடும்பத்தலைவர்களை அழித்துள்ளது. இவற்றில் குறைந்தது பதினையாயிரம் குடும்பங்கள் மிகவும் வறுமையில் வாடுவதாகக் கணிக்கமுடியும். இக்குடும்பங்களுக்குரிய புனர்வாழ்வு வேலைகள் மிக அவசியமான இன்றைய பணியாகவுள்ளது. இந்நிலையில் புனர்வாழ்வு நிறுவனம் தனது பணிகளை பின்வரும் கைத்தொழில் நிலையங்கள் அமைத்தல், காப்பகங்கள் அமைத்தல், வீடுகளைப் புனரமைத்துக் கொடுத்தல், மாணவர்களுக்கான பாடசாலைப் பொருட்கள் வழங்குதல், உளஆற்றுப்படுத்தல், நிவாரணமளித்தல் போன்றவற்றைச் செய்துவருகின்றது.

## கைத்தொழில் நிலையங்கள்

உழைப்பாளரை இழந்த குடும்பங்கள் வறுமையிலிருந்து விடுபடவேண்டுமாயின் அக்குடும்ப அங்கத்தவர் தொழில் வாய்ப்பினைப் பெற்று வருமானத்தை ஈட்ட வேண்டும். வருமானமீட்டும் வீட்டுத் தோட்டம், விலங்கு வேளாண்மை என்பனவற்றில் ஈடுபட வசதியுள்ளவர்கள் அவற்றிலீடுபடவேண்டும்.

சிறீலங்கா கடற்படை நடவடிக்கைகளுக்கு இலக்கான பகுதிகள் முதலில் எமது தேர்வுக்குரிய இடங்களாக இருந்தன. கோட்டை, மண்டைதீவு அண்மித்த பகுதிகளான கரையோரப்பகுதிகளான பூம்புகார், பாசையூர், குருநகர், நாவாந்துறை, கொட்டடி, வசந்தபுரம் அடங்கலான இடத்தில் எமது ஐந்து கைத்தொழில் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவை துப்புத்தொழிற்சாலை, அப்பள உற்பத்தித் தொழிற்சாலை, சிற்றுண்டிப் பொருட்கள் உற்பத்தித் தொழிற்சாலைகளாகவுள்ளன. ஒவ்வொரு தொழில் நிலையங்களிலும் 20 - 25 பெண்கள் தொழில் செய்கின்றனர். உயர் தொழிற்றிறனும் முழுஆர்வமும் கொண்ட பெண்கள் மாதாந்தம் 1500- 2000 ரூபா வரை ஊதியம் பெறுகின்றனர். இது அவர்களது குடும்பத்திற்கு தேவையான வருமானத்தின் ஒரு பகுதியை ஈடு செய்கின்றது. இதே போன்று நெல்லியடிப்பகுதியில் ஆடை தயாரிப்பு நிலையமும் மானிப்பாயில் காகித உற்பத்தி நிலையமும் அமைக்கப்பட்டுள்ளன. மேற்படி கைவேலைகள் உட்பட கிடுகு பின்னுதல், பனையோலைப் பொருட்கள் பின்னுதல் என்பனவும் செய்யப்படுகின்றன.

யாழ் குடா, வன்னி, மன்னார் உட்பட மேற்படி கைவேலைகள் செய்யும் கைத்தொழில் நிலையங்கள்பதினான்கு எமது நிறுவனத்தினால் நிறுவப்பட்டுள்ளன; இவ்வுற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கென மூன்று விற்பனைநிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேற்படி தொழில் நிலையங்கள், விற்பனை நிலையங்களை முகாமை செய்வதற்கென படித்த இளம் பெண்கள் அமர்த்தப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றனர். எதிர்காலத்தில் இவர்களது முகாமைத்திறன் வளர்கின்றபொழுது நிறுவனத்தின் திட்டங்கள் வளர்ச்சியடைய உதவும். கணவனைப் பிரிந்த குடும்பப் பெண்கள் மிகவும் இவ்வேலைத் திட்டங்களில் தொழில் வாய்ப்பைப் பெற்று வருகின்றனர்.

## சமூக நலக் காப்பகங்கள்

ஆதரவற்ற இளம் பெண்கள், குடும்பத் தலைவரின் வன்முறை தாங்க முடியாது பாதுகாப்புத் தேடிவரும் குடும்பங்கள், குடும்ப அழுத்தத்திற்கு, குடும்ப வன்முறைக்கும் ஆளான திருமணமாகாத தாய்மார்கள் ஆகியோருக்குக் காப்பளிக்கும் நிலையங்களாக இவை உள்ளன குடாநாட்டில் ஐந்து காப்பகங்கள் இவர்களுக்காக புனர்வாழ்வு நிறுவனத்தினால் அமைக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சியிலும் மேலும் ஒரு காப்பகம் உள்ளது. ஒவ்வொரு காப்பகத்திலும் குழந்தைகள், சிறுவர்கள், இளம்பெண்கள், தாய்மார்கள் உட்பட இருபது பேர்கள் உள்ளனர்.

## வேலையாட் சிறார்கள்

இங்கேயுள்ள இளம் பெண்கள் பலரும் வேலையாட் சிறார்களாக வீடுகளில் அமர்த்தப்பட்டிருந்தவர்கள். இவர்களின் சொந்த இடங்கள் தென்னிலங்கையிலுள்ள ஊர்களாகவுள்ளன. இவர்கள் தமது சிறுவயதிலேயே தாய் தந்தையரை விட்டுப்பிரிந்துள்ளனர். பலருக்கு தாய், தந்தையரின் முகங்கள்கூட ஞாபகமில்லை. பெரும் பணக்காரக் குடும்பங்களின் வீட்டு வேலையாட்களாக அமர்த்தப்பட்டு, சிறு வயதிலிருந்தே கடுமையாக வேலை வாங்கப்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# புனர்வாழ்வு நிறுவனம்

பட்டுள்ளனர். போசாக்கான உணவளிக்கப்படாமல் இருந்துள்ளனர். பட்டினி போட்டு வதைக்கப்பட்டுள்ளனர். பாடசாலைக்கு இவர்கள் அனுப்பப்படவில்லை. வீட்டிலும் இவர்களுக்கு கற்பிக்கப்படவில்லை. நெருப்பில்காய்ச்சப்பட்ட உலோக அகப்பை அல்லது கம்பிகளால் சூடு வைக்கப்பட்டுள்ளனர். அடித்து உதைக்கப்பட்டுள்ளனர். சுமக்கமுடியாத வேலைப்பளுவை கூலியின்றிச் சுமந்தனர். கேட்க யாருமற்ற நிலையில் இச் சிறார்கள அவ் வீடுகளில் பாலியல் கொடுமைக்கும் ஆளாகினார்கள் என்பது தேச நலன் விரும்பும் எவரின் மனதையும் கசக்கிப் பிழியும் விடயமாகும்

## கணவனை விட்டுப்பிரிந்து வந்தகுடும்பங்கள்

பொறுப் புணர்வற்ற குடும்பத் தலைவர் தம் மனைவியையும் பிள்ளைகளையும் அடிக்கு உதைக்கின்றனர் பல சந்தர்ப்பங்களிலும் குடி பாதையில் வந்து நிதானமிழந்த நிலையில் மனைவியருக்கும் பிள்ளைகளுக்கும் பல கொடுமைகளைச் செய்கின்றனர். பொறுக்கமுடியாத கட்டத்தில் மனைவியர் பிள்ளைகளுடன் வீட்டைவிட்டு வெளியேறுகின்றனர்.

இவர்களில் சில தாய் மார்கள் சமுதாய நிந்தனைகளை எதிர்த்து துணிவோடு வாழ முயற்சித்தாலும் அவர்களுடைய குடும்பம் அவர்களுக்கு ஆதரவளிப்பதில்லை. இப்பெண்கள், குடும்பத்தின் வன்முறைக்கா ளாகின்றார்கள். குடும்பத்தின் வஞ்சனைக்கும் ஆளாகின்றார்கள். இந்நிலையில மனமுடைந்து அந்தக் குடும்பத்திலோ, சமுதாயத்திலோ வாழமுடியாத நிலையில் இவர்கள் கர்ப்பிணியாகவோ, கைக்குழந்தையுடனோ வீட்டைவிட்டு வெளியேறுகின்றனர். ஆனால் அடுத்து என்ன செய்வது என்று அறியாமல் விழிக்கின்றார்கள். திசை தெரியாது தத்தளிக்கிறார்கள். இந்த நிலையில் அக் கர்ப்பிணித் தாய்க்கோ, குழந்தை பெற்ற தாய்க்கோ ஒரு சொந்த வீடுபோல காப்பகம் தனது உதவியைச் செய்ய வேண்டியுள்ளது. இவர்களின் குழந்தைகளும் அங்கே தான் பராமரிக்கப்படு கிறார்கள்.

## தொழில் தெரிவும் தொழில் பயிற்சியும்

அரச இராணுவ ஒடுக்கு முறைகளினாலும் சரி, சமூக இன்னல்களினாலும் சரி- பாதிப்புக்குள்ளான குடும்பங்களில் பெண்கள் பெரும்பாலும் உள்நெருக்கடிக்கு ஆளானவர்களாகவும், விரக்திக்குள் ளானவர்களாகவும் உள்ளது பலராலும் விளங்கிக் கொள்ள முடியும். தமக்கு ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து இலகுவில் மீளமுடியாதுள்ளதை உய்த்துணரமுடியும். இந்நிலையில் இவர்களுக்குரிய உள ஆற்றுப்படுத்தல், குடும்பத்தை வறுமையின் பிடியிலிருந்து தளர்த்துவதற்கான நிவாரணம் என்பன வழங்கப்பட்டாலோ இவர்கள் தொழில் தெரிவுக்கும் தொழிற் பயிற்சிக்கும் தயாராக முடியும். எமது நிறுவனத்தின் தொழில் நிலையங்களில் தொழில் வாய்ப்புப் பெற்றுள்ள பலரும் இந் நிலைகளைக் கடந்து வந்தவர்களே.

இவர்களுக்கெனத் தொழிலைத் தேர்வு செய்கின்றபொழுது அவர்களது முன்னைய தொழில் அனுபவம், பெற்றுக்கொண்ட தொழிற்பயிற்சி, தொழில் விருப்பு, தொழிலாற்றல் என்பவற்றைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டியுள்ளது.

இவ்வகையில் நோக்கின் இவர்கள் பெற்றுள்ள கல்வி சிறுவயதில் பெற்றுக்கொண்ட ஆரம்பக்கல்வி மட்டுமே. சிலர் அதையும் பெற்றிருக்கவில்லை. இதனால் இவர்களுக்கு பாரம்பரிய முறையிலான தொழில்களையும் இலகுவாகப் பயின்று கொள்ளக் கூடிய தொழில்களையும் குறைந்த உடல் வலுவைப் பயன்படுத்துகின்ற தொழில் களையும் தெரிவு செய்ய வேண்டியுள்ளது.

இவ்வடிப்படையிலேயே இப் பெண்களுக்கான கைத்தொழில் நிலையங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இக்கைத்தொழிற் நிலையங்களே புதியபயனாளிகளுக்கு பயிற்சியை வழங்குகின்ற பயிற்சி நிலையங்களாகவும் செயற்படுகின்றன.



பெண்ணினத்தின் விடுதலை நோக்கிய பாதையில், அவர்களது சமூக, பொருளாதார வாழ்வு மேம்படுவது அவசியம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

- தேசியத்தலைவர்



## வளர்ச்சிப்படியில் தும்பு ஆலை

எமது நிறுவனத்தினால் அமைக்கப்பட்டுள்ள தும்பு ஆலை கிளிநொச்சி மாவட்டத்தில் வள்ளிபுனம் பகுதியில் உள்ளது. இங்கே தென்னந் தும்பு உற்பத்தி இயந்திரமயமாக்கப்பட்டுள்ளது. இந்த இயந்திரப் பொறிகளில் வேலைசெய்வதற்குப் பத்துப் பெண்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். இங்கு உற்பத்தியாக்கப்படும் தும்பினை மூலப் பொருளாகக்கொண்டு நூறு பெண்கள் வேலை வாய்ப்பினைப் பெறமுடியும் சென்ற ஆண்டில் இருபது பெண்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுளளது. மேலும் எண்பது பெண்களுக்கு இவ்வாண்டில் வேலை வழங்கப்படவுள்ளது.

## காகிதத் தொழிற் சாலை:

பழைய காகிதங்களிலிருந்து புதிய காகிதம் தயாரித்தல், காகிதப் பொம்மைகள் தயாரித்தல், ஏனைய காகிதப் பொருட்கள் தயாரித்தலுக்குரிய ஆய்வுகளும் பயிற்சிகளும்மேற்கொள்ளபபட்டு வருகின்றன. இவற்றை உற்பத்திசெய்வதற்கான காகிதக்கூழ் தயாரிக்கும் இயந்திரம் எம்மால் உருவாக்கப்பட்டு, காகிதக்கூழ் உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது இவ்வியந்திரம் காகித உற்பத்தித் திறனை அதிகரித்துள்ளதால், இக்கைத்தொழிலில் ஏற்கனவே ஈடுபட்டுள்ள பதினைந்து பெண்களைவிட மேலும் இருபத்தைந்து பெண்களுக்கு வேலைவாய்ப்பை வழங்க இத்தொழிற்சாலையால் முடியும்.

## விவசாய விரிவாக்கம்

தற்சமயம் இருபத்தைந்து ஏக்கர் நிலத்தில் நெற் பயிர்ச் செய்கையும் பத்து ஏக்கர் நிலத்தில் வேறு தானியச் செய்கைகளும் எமது நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ் ஆண்டில் மேலும் ஐம்பது ஏக்கர் நிலத்தில் விவசாய நடவடிக்கைகளை விரிவுபடுத்தும்பொழுது பெண்கள் வேலைவாய்ப்புப் பெறமுடியும்.

## எல்லோரும் சேர்ந்து உயர்த்துவோம.

அண்ணளவாக இருநூறு பெண்கள் தொழில் வாய்ப்பினைப் பெற்றுள்ளனர். நூறுக்கு மேற்பட்டவர்கள் காப்பகங்களில் காப்பளிக்கப்பட்டுள்ளனர். ஐம்பதுக்கு மேற்பட்டவர்கள் தொழில், தொழிற் பயிற்சியையும், தொழில் அனுபவத்தையும பெற்று வெளியேறியுள்ளனர். ஐம்பதுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு வீடு புனரமைத்தல், அல்லது மாணவர்களது கல்விப் பொருட்கள் வழங்குதல் நிவாரணம் என்பன மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தவகையில் கடந்த நாலாண்டுகளில நாநூறுக்கு மேற்பட்ட குடும்பங்கள் புனர்வாழ்வு நிறுவனத்தின் உதவியையும சேவையையும் பெற்றுள்ளனர். எமது கைத்தொழில் நிலையங்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தும் அமைபபை மேம்படுத்துவதனூடாக இவ்வாண்டில் மேலும் ஐந்நூறு குடும்பங்களுக்கு உதவி மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது. எமது தேசத்தின் மேம்பாட்டோடு அடிமட்டக் குடும்பங்களை குறிப்பாக உழைப்பாளர்களை இழந்த குடும்பங்களை இணைக்கும் பணியாக எமது நிறுவனத்தின் நடவடிக்கை அமைந்துளளது இனப்பற்றும் தேசாபிமானமுமுள்ளமக்கள் தம்மிடமுள்ள நிதிவளத்தையோ, பொருள் வளத்தையோ தமது சேவையையோ இத்திட்டத்துக்கு வழங்கும் பொழுது ஆயிரக்கணக்கில் உழைபபாளர்களை இழந்த குடுமபங்கள் முன்னேற முடியும்.

சுடரவள்

## உனது
# விம்பம்

## சூரியனை மறைப்பதாய்...

கண்களை இடுக்கிக் கொண்டு அம்மா அதை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள். தூசி மண்டிப்போய் மேசையிற் புத்தகங்கள் அநாதையாய்க் கிடந்தன. அதைத் தட்டித் துடைத்து ஒழுங்குபடுத்த அம்மாவுக்கு விருப்பமில்லை. அவை அம்மாவின் மகள் படித்தவை. கடைசியாக எப்பிடி இருந்ததோ அதேமாதிரி இப்போதும் சற்றும் இடம்மாறாமல் அவை இருந்தன. அவற்றையும் அந்தக் கதிரையையும் பார்க்கும்போது அவளுக்கு தன் அம்முக்குட்டியின் ஞாபகம் வரும். அவளுக்குள் முகடு உடைத்துக்கொண்டு ஏதோ ஒன்று உள்ளுக்குள் தவிக்கும். உலகத்தின் துன்பங்கள் எல்லாம் தன்மீது அழுத்திவிட்டது போல அவள் தனக்குள் வெம்புவாள்.

அடிக்கடி கிறீச்சிட்டு ஓயும் அந்தக் கதிரையைப் பின்னுக்குத் தள்ளிக் கொண்டு அம்முக்குட்டி 'அம்மா' என்றபடி தன்னை நோக்கி வருவது போல அவளுக்குத் தோன்றும். பின்னர் இதயம்படபடக்க எல்லாம் வெறும் பிரமை என்றபடி தன்னைச் சிலிர்த்துக்கொள்வாள். எதிரே சுவரை வெறித்தபடி அவளது பார்வை பதியும். அது அம்மாவின் நெற்றியைப் போல வெறுமையாக இருந்தது. ஆனால் அவளின் அம்முக்குட்டி அந்த வீட்டில் எங்கோ ஒளிந்தபடி உயிர்த்துடிப்பாய் உலாவுவதாக அவள் நம்பினாள்.

சுவர் ஓரமாகச் சுருண்ட நாய்க்குட்டி. அவளைப் பரிதாபமாகப் பார்த்தது இரவு ஏதோ பிராணி அதைக் கடித்திருக்க வேண்டும். இடதுபக்கச் செவியில் இரத்தம் கசிந்து காய்ந்துபோய் இருந்தது. அது அவளது அம்முக்குட்டி ஆசையோடு வளர்த்த நாய்க்குட்டி இப்போது அதற்கு நன்றாக வயதுபோய் எலும்புகள் துருத்திக்கொண்டு நின்றன. அம்முக்குட்டிக்கு எப்போதுமே பிராணிகளிடத்தில் உயிர். ஊர் நாயெல்லாம் அவளைக் கண்டு வாலாட்டும்.

''அதுகள் வாய்பேசாத சீவனுகள்''

என்றபடி சாப்பிடும்போது நாயையும் பூனைக்குட்டியையும் தன் இருபுறத்திலும் நிற்க வைத்தபடி இருப்பாள்.

அது பனிக்காலம். புகார் விலகாத அதிகாலையில் அவள் அந்த நாய்க்குட்டியைத் தூக்கிக்கொண்டு வந்தாள். பனியில் உடலைச் சுருட்டி உரோமக்கால்களைச் சிலுப்பியபடி அது நின்றது.

''உதுகளை ஏன் அண்டுறாய்? வீட்டை நாசப்படுத்தப் போகுது பிள்ளை''

அம்மா அரியண்டப்பட்டுப் புறுபுறுக்க அவள் முகஞ்சிணுங்கி ''பாவமணை. குளிரிலை நடுங்கிக்கொண்டுகிடந்தது. வாகனம் அடிச்சுச் செத்துப்போடும்''

உடம்போடு சேறு அப்பியபடி இருந்த அந்த நாய்க்குட்டியை அவள் நடுமுற்றத்திற் கிடத்தினாள். அது சின்னத் தவ்வல். கையுக்குள் அடங்குமாப்போல அது இருந்தது. மண்நிறத்திலே சுண்ணாப்புக் கலவையை திட்டுத்திட்டாய்க் கொட்டிவிட்ட மாதிரி ஒரு நிறம். பார்க்க வடிவாகத்தான் இருந்தது.

''நல்ல வடிவு என்னணை''

அந்த நாய்க் குட்டியின் இருகன்னங்களையும் வாஞ்சையோடு தடவி மடியிலிருத்தியபடி முகத்தில் சந்தோசம் அப்பியபடி நின்றாள். அவளுக்கு அதில் சரியான விருப்பம். அவள் வீட்டில் தனிப்பிறவி என்றபடியாலோ என்னவோ அவளைச் சுற்றி நாய்க்குட்டியும் பூனைக்குட்டியும் வளைய வந்தபடி திரிந்தன. இவற்றோடு சிலாகித்திருப்பது அவளுக்கு முக்கியமானதொரு பொழுதுபோக்கு.

அம்மா அந்த நாய்க் குட்டியைப் பார்த்தாள். அம்மாவுக்கு இப்போதெல்லாம் அதனிடம் இனந்தெரியாத பாசம். பாசம் என்பதைவிட மிகுந்த பச்சாத்தாபம். தன்னைப் போலத்தானே அதுவும் என்ற பரிவு. அது இப்போதெல்லாம் நன்றாகச் சாப்பிடுவதில்லை. அம்முக்குட்டி நிரந்தரமாக அந்த வீட்டிலிருந்து விடைபெற்றதிலிருந்து அது நிறைய மாறிப்போய்விட்டது. முன்னைய சுறுசுறுப்பு கொஞ்சமேனுமில்லை பக்கத்து வீட்டு நாய்க்குட்டிகளோடும் அது சேருவதில்லை. எந்நேரமும் ஒரு மூலையிற் சுருண்டு படுக்கும். எப்போதாவது அம்முக்குட்டி வரும்போதுமட்டும் தனது பாசையில் அவளிடம் எதையோ யாசிப்பதைப் போல உருகிநிற்கும்.

அவள் மௌனமாக அதைப் பார்த்தபடி தடவுவாள். பின்னர் அம்மாவை அணைத்து ஆறுதல் கூறிபடி போய்விடுவாள். அந்தநடையில் அவசரமும் கம்பீரமும் தெரியும்.

அம்மா அப்போதெல்லாம் அவளிடம் நிறையச் சொல்வதற்கு முனைவாள். எல்லாவற்றையும் ஏற்றுத் தலையாட்டி அம்மாவிடம் விடைபெற்றுப் போவாள். தூரத்தே அவளை ஏற்றிய வாகனம் மறையுமட்டும் அம்மா ஏக்கத்தோடு பார்த்தபடி வழியனுப்புவாள். எல்லாவற்றையும் மீறி அம்மாவுக்கு ஒருகணம் பெருமை பொங்கும். ''எப்படி இருந்தவள் எப்படி மாறினாள்?'' அவளுக்குள் இருந்த, அந்தக் கண்களுக்குள் உறைந்த அந்தத் தகிப்பை அம்மா பலமுறை எண்ணி, வியந்து, விடைகாணாமற் தோற்றதுண்டு.

சற்றே நீல நிறம் படிந்த அந்தக் கண்களும் தலையை மெல்லச் சாய்த்துச் செல்லும் அவள் நடையும். இந்தப் பிள்ளை சாதிக்கப் பிறந்தது என்ற நயினாதீவுச் சாத்திரியாரின் சொல்லை அம்மா அப்படியே நம்பினாள். மேசை விளக்கொளியில் முகம் விகாசித்தபடி இரவு நீண்ட நேரங்கள் அவள் படித்துக் கொண்டிருக்கும்போது அம்மாவுக்கு இனம்தெரியாத பூரிப்பு அப்பொழுதெல்லாம் அம்முக்குட்டியின் நெஞ்சத்துள் அக்கினி ஒன்று எரிந்ததை அம்மா உணர வாய்ப்பில்லை. அம்மாவைப் பொறுத்தவரை அவளது மகள் பச்சைக்குழந்தை. படிப்பைத்தவிர எதையுமே அறிந்துகொள்ளாத அப்பாவி.

எண்பத்துமூன்று யூலையில் அப்பாவோடு போய்விட்ட அம்மாவின் நெற்றிப்பொட்டையும், நிரந்தரமாக வெள்ளைச்சேலைக்குள் புகுந்துவிட்ட அம்மாவினது சோகம் நிறைந்த முகத்தையும் காணும்போது அவளுக்குள் எரிமலை ஒன்று குமுறும்.

பயப்பிராந்தியுடன்தான் அவளை அம்மா பள்ளிக்கூடம் அனுப்புவாள். ''பிள்ளை மேலை சுத்தினால் கவனம்'' வயிறு குதற, நெஞ்சு புரைய அம்மா கடவுளை வேண்டிக் கொள்வாள்.

அவள் எப்படி மாறினாள்?

இரவில் வெளியில் வருவதற்கு அவளுக்குப் பயம். மர்மக்கதைகளை அம்மா சொல்லும்போது கேட்டுக்கொண்டிருந்துவிட்டு அம்மாவுடன் ஒட்டிக்கொள்வாள். கண்களை இறுக்கி மூடியபடியே அவற்றைக் கேட்டுக்கொண்டிருப்பதில் அவளுக்கு பாதுகாப்பு உணர்ச்சி தென்படும். அவள் வளர்ந்து பெரியவளாகியும் அம்மாவுடனேயே தூங்குவாள். பக்கத்துவீட்டுக் கவிதாவை துணையாக கூட்டிக்கொண்டு வெளியிற் போவாள். இரண்டு பேரும் துள்ளித் திரிந்தபடி செல்லும்போது அம்மாவுக்கு கவலை விட்டுப்போகும். தன் பிள்ளைக்குத் துணையாக ஒருவரும் இல்லையே என்ற நெடுநாளைய ஏக்கம் மறைந்துவிடும்.

அதற்கு இடிவிழுந்ததுபோல் தூங்கிக்கொண்டிருந்த கவிதாவின் இடது பக்கக்காலை ஒரு பின்னிரவில் செல்கொண்டு போனது. அப்போதெல்லாம் கவிதாவை விட அம்முக்குட்டி துடித்துப்போனாள். தன் காலைப் பறிகொடுத்ததைப் போல அவள் அழுதாள். கவிதா ஒன்றரைக் காலோடு கெந்திக் கெந்தி நடக்கையில் அம்முக்குட்டியின் கண்களில் இரத்தம் வடியும். அவ்வளவு உயிர் அவளில்.



எல்லாவற்றையும் மீறி அம்மாவுக்கு ஒரு கணம் பெருமை பொங்கும். ''எப்படி இருந்தவள் எப்படி மாறினாள்?'' அவளுக்குள் இருந்த, அந்தக் கண்களுக்குள் உறைந்த அந்தத் தகிப்பை பலமுறை எண்ணி, வியந்து, விடைகாணாமல் தோற்றதுண்டு.

அம்மாவுக்கு இன்றும் நம்பமுடியாமல் இருந்தது.

அந்த நாளை அம்மா வாழ்நாளில் மறக்கமாட்டாள். அந்த ஞாயிற்றுக் கிழமையிலிருந்து அம்மா ஊரிலுள்ள எல்லாக் கோயில்களுக்கும் போகத்தொடங்கினாள். அன்றுகாலை 'ரியூசனுக்குப் போகவென வெளிக்கிட்டுப்போன அம்முக்குட்டி திரும்பவில்லை. மேசையில் அவளது அழகான குண்டுக் குண்டு எழுத்தில் அம்மாவுக்குக் கடிதம் கிடந்தது.

அது நடந்த ஒரு வருடத்தின் பின்பு அம்முக்குட்டி வந்துபோனாள். அம்மாவுக்கு தன் கண்களை நம்பமுடியாமல். இருந்தது. அந்தச் சீருடையும் கையில் ஆயுதமும் அவளின் நடைவித்தியாசமாக... – அதில் உறுதி தெரிந்தது. ஆனால் அந்தப்பார்வைக்கு மட்டும் அம்மாவை ஆறுதல் படுத்திற வீரியம் இருந்தது. அம்மாவின் கண்களைத்துடைத்து,

''இனி அடுத்த சந்ததி எங்களை மாதிரி வாழக்கூடாதணை''

''உடம்பைப் பார்த்துக் கொள்ளம்மா. என்னை நினைச்சுக் கவலைப்படாதையணை என்னைப்போல ஆயிரமாயிரம் பிள்ளையள் போராடிக் கொண்டிருக்குதுகள்.''

அவள் எவ்வாறு இப்படி வாழக் கற்றுக் கொண்டாள்? அம்மாவிடம் தன் செல்ல மகளின் மாற்றத்தைக்கண்டு ஒரு புறம் இனந்தெரியாத பெருமை. மறுபுறம் சோகம் குடிகொள்ளும்.

'பசி குளிர் தாங்காத பிள்ளை என்னமாதிரிக் கஷ்டப்படுதோ?'' அம்மாவிடம் கவலை அப்பிக்கொள்ளும். நெஞ்சு நீர் வற்றித் தவிக்கும். இதயத்தின் அடியில் பெருமூச்சு ஒன்று சுழித்து அடங்கும்.

மாவீரர் நாளுக்காக ஊர்களை கட்டிவிட்டது. சிவப்பு மஞ்சள் கொடிகள் வீதியைக் குறுக்கு நெடுக்குமாக அலங்கரித்துக் கொண்டிருந்தன. அந்த நாளில் நள்ளிரவை அம்மா எதிர்பார்த்தபடி

(தொடர்ச்சி 09ம் பக்கம்)

# உடையாத விலங்குகள்

- அடேல் ஆன்

...சொத்துரிமைகளைப் பேணுவதும், சொத்து ...ள ஒழுங்கமைப்பதும்தான் தேசவழமைச் ...த்தின் சாராம்சமாக, அதன் அடிப்படைச் ...பாடாக இருந்தது எனலாம். பண்டைய ...பாண சமுதாயத்தில் திருமண முறைமையா ...முக்கியத்துவம் வாய்ந்த சமூக நிறுவனமாக ...யது. சமூக இயக்கத்தின் மையமாகவும் ...ந்தது. இந்த திருமண நிறுவனத்துடன் ...பிரியாதவாறு சொத்துடமை உறவுகள் பின் ...ணைந்து இருந்தன. தேசவழமையை நன்கு ...ந்து பார்த்தால் இது புலனாகும். முதிசம், ...ம், தேடிய தேட்டம் என்ற வகையில், சொத் ...மை மூன்று ரகங்களாக பராதீனப்படுத்தும் ...பற்றி தேசவழமை விளக்குகிறது. இந்த ...று ரக சொத்துப் பிரிவுகளுக்கும் தேசவழமை ... கொடுக்கப்படும் வரைவிலக்கணத்திலிருந்து ...ணத்துக்கும் சொத்துறவுகளுக்கும் மத்தியி... தொடர்பினைப் புரிந்து கொள்ளலாம். தேச...மை சொல்கிறது;

''பண்டைக்காலத்திலிருந்தே திருமணம் வாயி...க கணவன் மனைவியால் கொண்டு வரப்பட்டு ...று சேரும் சகல உடைமைகளும் பிரித்து வைக்...பட்டன. கணவனால் கொண்டுவரப்படும் ஆத...த்தை முதுசம் அல்லது பரம்பரைச் சொத்து ...ன்ற பிரிவாகவும், மனைவியினால் கொண்டுவரப்...டுவதை சீதனம் அல்லது வரதட்சணை என்ற பிரிவாகவும் திருமணம் நிலைத்திருக்கும்பொழுது பெறப்படும் இலாபங்களை தேடியதேட்டம் அல்லது சம்பாதனம் என்ற பிரிவாகவும் வகுக்கப்பட்டுள்ளது''

பண்டைய யாழ்ப்பாண மக்களின் பண்பாட்டு வாழ்வில், ...ருமணமும், குடும்ப உருவாக்கமும் ஒரு மையமான இடத்தை வகித்தது. திருமணமானது சந்ததி விருத்தியை மட்டும் பேணவில்லை. சொத்துறவுகளைப் பேணுவதிலும், சொத்துறவுகளை மீளாக்கம் செய்வதிலும் முக்கிய பங்கு வகித்தது.

திருமணங்கள் பெற்றோராலும், உறவினராலும் ஒழுங்குசெய்யப்பட்டன. இந்த ஒழுங்குத் திருமணத்தில், வாழ்க்கைத் துணையை தாமாகத் தேர்ந்தெடுக்கும் தெரிவுரிமை தம்பதிகளுக்கு இருக்கவில்லை. ஒழுங்குத் திருமண முறைமையில் பெற்றோரே பிரதான பாத்திரத்தை வகித்தனர். அவர்களே திருமணத்தை ஒழுங்கு செய்தனர். இளம் தம்பதிகள் பெற்றோருக்கு பணிந்துபோகும் பங்காளிகளாகவே இருந்தனர். அந்தக் காலத்தில் அநேகமாக மிகவும் இளம் வயதிலேயே திருமணங்கள் நிகழ்ந்தன.

திருமண ஒழுங்கில், சாதியமும், சொத்துடமையும் முக்கிய அம்சமாக விளங்கின. குறிப்பாக வேளாள சமூகத்தினர் மத்தியில் இந்த நடைமுறை இருந்தது. ''நீண்டகாலமாக, வேளாளர்களே பொருள்வளம் கொண்டவர்களாக விளங்கினர்

**உடையாத விலங்குகள் (Unbroken Chains) என்ற தலைப்பில் யாழ்ப்பாண சமூகத்தில் நிலவும் சீதன முறைமைபற்றி அடேல் ஆன் எழுதிய ஆங்கில நூலிலிருந்து, சில பகுதிகளை இங்கே தருகின்றோம்.**

அவர்கள் தமது சாதிய வட்டத்துக்குள்ளேயே திருமணம் செய்து கொண்டனர்'' என்கிறார் பல்டேயஸ் (6). சொந்த சாதிக்குள் மட்டுமன்றி குடும்ப உறவுக்குள்ளும் திருமணங்கள் நிகழ்ந்தன. இதற்கு சமூக அங்கீகாரமும் இருந்தது. தமிழர் குடும்ப உறவுமுறைமையில் சகோதரன், சகோதரி பிள்ளைகளான மைத்துனர்கள் திருமணம் செய்துகொள்ள அனுமதிக்கப்படுகின்றனர்

★ ★ ★

ஒட்டுமொத்தத்தில் பார்க்குமிடத்து, ஒழுங்குத் திருமண முறைமையானது சொத்துடமை உறவுகளைப் பேணுவதற்கும் நீடிப்பதற்கும் ஏதுவாக உள்ளது எனலாம். சாதியக் சட்டமைப்புக்குள் சமூக மேலாதிக்கத்தை பேணுவதற்கும் இது வாய்ப்பாக இருந்தது எனவே சொத்துடமையை நிலைப்படுத்தி, நீடிப்பதில் திருமண நடைமுறை முக்கிய பங்கு வகித்தது எனக்கொள்ளலாம். திருமண நிகழ்ச்சியும் முக்கியமானதாக அமைந்துள்ளது. திருமண நிகழ்ச்சியின்போதே பெண்களுக்கு சொத்துடமை பராதீனப்படுத்தப்பட்டது. திருமணத்தின் போது பெண்களுக்கு வழங்கப்படும் சொத்துடமையே சீதனம் என அழைக்கப்பட்டது.

திருமண வைபவத்தின்போது மணப்பெண்ணுக்கு வழங்கப்படும் சொத்துடமையைச் சீதனமென தேசவழமை விளக்குகிறது, தேசவழமையில் இன்னொருபந்தியை நாம் இங்கு மேற்கோள் காட்ட விரும்புகிறோம். இதில் முதிசத்துக்கும், ஒரு பெண்ணின் சீதனத்துக்கும் மத்தியிலான வேறுபாட்டைக் காட்டுவதுடன் சீதனத்தின் தன்மையையும் தெளிவாக விளக்குகின்றது.

''தந்தை இறந்தவுடன் அவரால் திருமணத்தின்போது கொண்டுவரப்பட்ட உடமைகள் யாவும் புதல்வனுக்கு அல்லது புதல்வர்களுக்கு பரம்பரைச் சொத்தாக சென்றடையும், புதல்வி அல்லது புதல்விகள் திருமணம் செய்யும்போது அவர்கள் ஒவ்வொருவருக்கும் சீதனம் அல்லது வரதட்சணையாக அவர்களது தாயின் சொத்துக்கள் பகிர்ந்தளிக்கப்படும். ஆகவே வழக்கமாக கணவனின் சொத்து எப்பொழுதும் ஆண்வாரிசுகளிடமும் மனைவியின் சொத்து பெண் வாரிசுகளிடமும் சென்றடையும்''(7

''பெற்றோர்கள் உயிருடன் இருக்கும்வரை, ஆண்பிள்ளைகள் எந்த உடமைக்கும் உரித்துக் கோரக்கூடாது'' (8) என்றும் தேசவழமை விதிக்கிறது. திருமணத்தின்போது மணப்பெண்ணுக்கு சொத்துடமை பராதீனப்படுத்தப்படுகிறது. "உறுதி ஓலையில் எழுதப்பட்டு வழங்கப்படும் சீதனத்துடன் புதல்விகள் திருப்தி காண வேண்டும். அத்துடன் மேற்கொண்டு பெற்றோரின் சொத்துடமையில் பங்குகோரும் உரிமை அவர்களுக்குக் கிடையாது. ஆனால் பெற்றோருக்கு வேறு பிள்ளைகள் இல்லாத பட்சத்தில் முழுச்சொத்துக்கும் அவர்கள் வாரிசு ஆவார்கள்'' (9)

சீதனமாக எழுதப்பட்டதைத் தவிர்த்து, மேலதிகமாக உடமைகளுக்கு உரித்துக் கோர பெண்களுக்கு உரிமையில்லை என விதிக்கப்பட்டபோதும், அவர்களுக்கு வாரிசுச் சொத்துரிமை உண்டு. இதன் அடிப்படையில் உறவினர்களிடமிருந்து வாரிசு சொத்துக்களையும் நன்கொடைகளையும் பெண்கள் பெற்றுக்கொள்ளலாம்.

---

## உலந்து விம்பம்...

இருந்தாள். காலை விடியு முன்பே எழுந்து முற்றங் கூட்டி எண்ணெய்சுட்டிகளை எடுத்து அடுக்கி வைத்தாள். விருந்துசோலச் சமைத்தாள். அவளின் குழந்தைகள் அம்மாவைத் தேடி வருவார்கள்.

இப்போதெல்லாம் அம்மா மாறிப்போனாள். அம்மாவைத் தேடி போராளிகள் நிறைய வருவார்கள். அம்முக்குட்டியைப்போல அம்மாவை அணைத்தபடி பிள்ளைகள் கதைப்பார்கள். அம்மா அவர்களில் அம்முக்குட்டியை பார்த்துத் திருப்திப்படுவாள். அந்தப் பிஞ்சு முகங்களைப் பார்க்கும்போது அந்த நிமிடங்களில் அம்மாவிடமிருந்து அந்த வெறுமை தளர்ந்துபோகும். வாழ்வின் பிடிப்பு மெல்லிய உயிர் துடிப்பாய்ப் பற்றிக் கொள்ளும்

இந்த மாவீரர் நாளுக்கும் அந்தச் சுவர் வெறுமையாகக் கிடந்தது

அம்முக்குட்டி 'அ' எழுதிக் கிறுக்கிய சுவடு மெல்ல அழிந்து போய் ஒரு துளியாய் இன்னும் கிடந்தது. அதைத் தவிர ஒன்றுமேயில்லை. எப்பேதும் அது வெறுமையாகத்தான் இருக்குமோ?

அவளுக்கு விதம்விதமாக பலகோணங்களில் தன்னைப் படம் பிடிப்பதில்விருப்பம் இறுதியாக அவள் விடுமுறையில் வந்து நிற்கும்போது அம்மாவ அணைத்தபடி நிறையப் புகைப்படங்கள் எடுத்தாள். ஒரு பக்கம் சாய்ந்து சிரிப்போடு அந்தப் படத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றாள்.

''இந்தப் படத்தை நீ எப்போதும் உன்னோட வைச்சிரணை''

அம்மா அந்தப் படத்தை நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள் விழிக் குழிகள் நிரம்பித் துடித்தன.

முற்றத்தில் அன்று நிறைய றோசாப் பூக்கள் கொத்துக் கொத்தாய்ப் பூத்திருந்தன. அம்முக்குட்டிக்கு றோசா என்றால் உயிர். இதழ்களிற் பனித்துளி ஏந்தி சிலிர்த்தபடி விரிந்திருக்கும் பூக்களை நெடுநேரம் பார்த்துக் கொண்டிருப்பாள். ஓடிஓடிச்சென்று முகர்ந்து பார்ப்பாள். அம்மாவுக்கு அந்தப் பூக்களைப் பார்க்க நெஞ்சு வலித்தது. அந்தப் பூக்களைப் பிடுங்கி மாலை கட்டி அவளுக்குப் போடவேணும்போல் இருந்தது

''ஓ. என்ன வந்திட்டுது எனக்கு''

அந்த வெறுமையான சுவரை அம்மா பார்த்தாள். அம்முக்குட்டியின் பெயரை மெல்ல மனதுக்குள் கூப்பிட்டாள். அப்படித்தான் முடியும் அவளால்.

''நேரம் வந்திட்டுது அம்மா வாங்கோ"

அவளை அந்தக் குழந்தைகள் அழைத்துச்சென்றார்கள். அம்மாவுக்கு நடக்கச் சக்தியில்லாமல் இருந்தது. அவர்கள் கைத்தாங்கலாகப் பற்றியபடி அம்மாவை அணைத்துச் சென்றார்கள். அந்த நிலையிலும் அம்மா தன் கை நிறையக் கொண்டு சென்ற றோசாப் பூக்களை கசங்கவிடாது மிகுந்த கவனத்தோடு கொண்டு சென்றாள்.

அம்மா அந்த நீண்ட கல்லறைகளில் அம்முக்குட்டியின் கல்லறையைத்தேடினாள்.

'ஏனிந்த வேண்டாத ஏக்கம் எதிர்பார்ப்பு'

அவளின் அம்முக்குட்டி இல்லை. வரிசையான நடுகற்களில் அவள் ஆசையோடு அம்மாளை நோக்கித் தவமிருந்து பெற்ற அம்முக்குட்டி என்ற அம்பிகை இல்லை. அம்மாவின் கண்கள் வலித்து மீண்டன

தீப்பந்தங்கள் நிமிர்ந்து வான் நோக்கி நின்றன. கோயிலுக்கு வந்திருக்கும் பவ்வியத்தோடு நிற்கும் அந்த உறவுகளைப் பார்த்தாள். கல்லறைகள் பளிச்சிட்டபடி தெரிந்தன. ஈரலித்துப்போன காற்று மெல்ல அவள் உடலைச் சில்லிட வைத்தது. அம்மா தன்னை உலுக்கிக் கொண்டாள். அவளின் அம்முக்குட்டி அந்தக் காற்றிலே, அது தாவிவரும் அந்தச் சின்னச் சின்னப் பூக்களிலே அதன் பனி ஈரத்திலே கலந்திருப்பதாக அவள் நம்பினாள்.

அவள் காதுகள் கேட்கவெனக் காத்திருந்த மணி ஒலித்தது. அம்மா கண்களை மூடிக்கொண்டாள். அந்தக் கல்லறைகள் யாவற்றிலுமே அவளது அம்முக்குட்டி உறைந்திருப்பதாக நினைத்தாள்.

- சுதாமதி -

சுதந்... தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க

---

### தவறுக்கு வருந்துகின்றோம்

1994 ஆனி மாத இதழில், நீத்திகைக்குளத்திலிருந்து இந்திய இராணுவ நிலை மீதான தாக்குதலில் இந்திய இராணுவத்தின் உலங்குவானூர்தி ஒன்று சேதப்படுத்தப்பட்டதாக தவறுதலாக குறிப்பிட்டிருந்தோம். அத்தாக்குதலின்போது இரண்டு உலங்குவானூர்திகள் சேதமாக்கப்பட்டன என்பதுதான் சரியானது.

---

### பாதிக்கப்பட்ட...

1-ம் பக்க தொடர்ச்சி

ளது குடும்பத்தின் பிரதான உழைப்பு பறிபோன நிலையில் தாய்மார் மிகுந்த சிரமங்களுக்குள்ளாகினர். அவர்களது குடும்பத்தின் பொருளாதாரம் என்பது சீர்குலைந்து போயிற்று.

இத்தகைய கடுமையான தாக்கங்களின் விளைவாக உளச்சமநிலை பாதிக்கப்பட்ட பெண்களும் எமது சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களில் குடும்பப் பொறுப்புக்களையும் வாழ்வுக்கான பொருளாதாரச் சுமைகளையும் சுமக்கவேண்டிய பொறுப்புக்களை தாயானவளோ தனித்துச் சுமக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்த நிலையில் சமூகத்தின் மேம்பாட்டில் பெண்களின் பொருளாதார மேம்பாடும் அவர்களின் உழைப்பாற்றலும் முக்கிய கவனமெடுக்க வேண்டிய ஒன்றாக அமைந்துள்ளது.

தற்போதுள்ள நிலையில் வடக்கு, கிழக்கு மேம்பாட்டுக்காக சிறீலங்கா அரசு நாலாயிரம் கோடி ரூபாவினை ஒதுக்கத் தீர்மானித்துள்ளது. இந்த நிலையில் இத்தகைய பெண்களுக்கான வேலைத்திட்டமும் பொருளாதார மேம்பாடும் முக்கிய கவனம் செலுத்தப்பட்டு, அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் நோக்குடன் செயற்படுவது அனைத்து திட்டமிடல் நிறுவனங்களினதும் பொறுப்பாகும்.

தொடர்ச்சியான யுத்தம், ஒருவருக்கு மற்றவர் உதவ முடியாத சூழ்நிலைகள், உழைப்பாளரை இழந்த பெண்கள் தாமாகவே தமது தொழிலைத் தேடிக்கொள்ள வேண்டிய நிலையை ஏற்படுத்துகிறது.

உழைப்பாளரை இழந்த பெண்கள் முன்வந்து, தமக்கென்று தொழில்களை ஏற்படுத்திக்கொள்வதன் மூலம் குடும்பத்தின் பிரதான உழைப்பாளிகளாக மாறும்போது பெண்களின் மேம்பாட்டு இலக்குகளை வேகமாக அடையக்கூடிய வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன,

எனவே இத்தருணத்தைப் பயன்படுத்தி உழைப்பாளர்களை இழந்த பெண்களை அறியாமை என்ற இருட்டிலிருந்து வெளிக்கொண்டு வந்து அவர்களுக்கு வழிகாட்டி கைதூக்கி விடக்கூடிய பணியினைத் திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டியதற்கான வேலைத்திட்டங்களை இனங்காணுவது தற்போதுள்ள சூழ்நிலையில் மிகவும் அவசியமானதாகும்.

# நீ மனிதன்!

## மனிதமுள்ள...

### ஓராயிரம் செயல்களின் கருச்சுமந்த...

கருமேகத் திரள் வானம்,
களங்கம் சுமந்த வீதிகள்,
எல்லைகள் பிடுங்கப்பட்டுப்
பிய்த்தெறிந்த வீடுகள்.
எங்கள் வானத்தில்
எமக்கென ஒன்றுமற்றுப்போன
அந்த வேளையில்தான்
நீ நீள்வானத்தில்
நிமிர்ந்தெழுந்தாய்.
ஆதவனாக இல்லை.
அக்கினிக் குழந்தைகளின் அன்னையாய்,
ஓராயிரம் விடிவெள்ளிகளுக்கு,
இன்னும் இறுகிக் சுறுத்து
இலக்குகள் தேடும்
கறுப்பு மனிதர்களின் உணர்வுப் பொறியாய்,

எங்கள் வீதிகளில்,
வீட்டு வாயிலின் அருகுவந்து
விளக்கேற்றிய அன்புச் சுடராய்,
வர்ணிக்க முடியாத வர்ணமானாய்.



உலகம் உற்றுப் பார்த்த எம் திசையில்,
எங்கிருந்தோ விலங்குச் சங்கிலிகளை
உனக்காக எண்ணிக்கொண்டிருக்கும்
விலங்குகளின்
அர்த்தமற்ற பேச்சுகளுக்கு
அப்பால்,
இன்னும் இன்னும் எங்கள் இதயங்களுக்கு
அருகில் வந்து
முகம் காட்டுகிறாய்.
யாரும் காணாத தெய்வமாகவல்ல,
வீடு தேடிவந்து விசாரிக்கும்
எல்லோர்க்கும் உரிய மனிதனாய்..

உணர்வு கலந்த வரிகளில்
உன்னை வர்ணிக்க முடியாத
ஒரு உண்மையான போராளி மனிதனுக்கு
அப்பாற்பட்டு நான் என்ன சொல்ல?

ஆயினும் எங்களின்
துப்பாக்கிகளுக்குத் தோட்டாக்களேற்றி
வைத்தவன் நீ.
சிறகொடிந்த வெறும்
விறகுக் கரங்களுக்கு
உயிர்ப்புண்டு எனத்
துடிப்புக் கொடுத்தவன் நீ.
கரைகாணாத கண்ணீர்ச் சுழல்களுக்கு
நடுவே கத்தித் தொலைக்கமுடியாமல்
அழுதுகொண்டிருந்தவளை
அகலிகையின் சாபவிமோசனமாகவல்ல,
அக்கினிக் குழந்தையாய்
பெற்றெடுத்தாய்.
இன்று தழல் சுமந்த விழியுடன்
தகிக்கின்ற மேனிகளில்,

உதிரம் ஊறிக்கிடக்கும்
மயிர்க்கலங்களில்,
தாயகக் காதலை
சுமந்து நின்ற
சுறுப்பு மனிதர்களாய்
உருமாற்றினாய்.
நேற்றுவரையும் கூனலிருந்தது.
இன்று நீ பெயரிட்டுப்
பிரசவித்த அக்கினிக் குழந்தை
நிமிர்ந்து நிற்கின்றது.

ஆழக் கடற்படகை,
அள்ளிவந்த ஆயுதத்தை,
நீள நெருப்புச் சுமந்த
காப்பரண் வேலித் தங்கதங்களை,
எட்ட முடியாது என எண்ணிய

இலக்கினையும் ... ...
இல்லாமற் செய்த பெருமை
எங்களுக்குரியது.
அதை எமக்கென உரித்தாக்கிய
காவலன் நீ.

புண் சுமந்த மனங்களின்
கண்ணீர் வீதிகளில்
புதியதொரு பறவையைச்
சிறையுடைத்துச் சிறகடித்துப்
பறக்கவிட்டாய்.
இன்று அத்திசையில்
ஆயிரம் — — ஆயிரம் — — ஆயிரம்
நீ காட்டுகின்ற பாதைகளில்
உன் காற்றடங்கள்
சரியாகப் பதிந்ததால்
எங்கள் பயணம் இலகுவாய் விட்ட...
மனிதா,
நரைவிழுந்த அகவையா உனக்கு?
உனது கனவுகள் — ...
அவை அப்படியல்ல.
உன் செயல்களின்
கருப் பொருள்கள் எல்லைதொடும்
வெகுவிரைவில்.

வாழ்த்துச் சொல்ல - எம்
வாய் மட்டும் போதாது.

நீ துடிப்பேற்றிய
சிறகொடிந்த விறகுக் கரங்களும்
தோட்டாக்களேற்றிய துப்பாக்கிகளும்
துணை நிற்கும்
என்பதை மட்டும் துணிந்து கூறுவேன்.

நீ மனிதன் — — நீ மனிதன் — —
வார்த்தைகளின் வர்ணிப்புக்கு அப்பால்,
ஒரு போராளி மனிதனின்
உணர்வு வரிச் சாட்சியாய்,
வெள்ளியென சூரியன் என
தெய்வமென இல்லாத
மனிதன் நீ ... வெறும் மனிதன்தானா?
இல்லை.
ஓராயிரம் செயல்களின் கருச்சுமந்த
மனிதமுள்ள மனிதன் நீ

– அணங்கு

புலிகளின் தாகம் தமிழீழத் தாயக...